## பள்ளிக் கல்வித்துறை
## சேலம் மாவட்டம்

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# வணிகவியல்
# வினா விடை வங்கி

***2012- 2013***

JAIRAM COLLEGE

வெளியீடு
**முதன்மைக் கல்வி அலுவலர்**
சேலம்

## ***தொகுப்பு ஆசிரியர்கள் குழு***

***01.*** **R.V.** ***சந்திரசேகரன் மு.க.ஆ.***

பாரதிவித்யாலயா மேனிலைப்பள்ளி சேலம்.

***02.*** **P.** ***சந்திரசேகரன் மு.க.ஆ.***

அரசு மேனிலைப்பள்ளி., புதுச்சாம்பள்ளி

***03.*** ***ப. இராசா மு.க.ஆ.***

அரசு (ம) மேனிலைப்பள்ளி பெத்தநாயக்கன்பாளையம்

JAIRAM COLLEGE

âU. ïuh.<°tu‹, M.A.,M.Ed.,
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

# thœ¤J klš

Ka‰á âUÉid M¡F« Ka‰Wï‹ik
ï‹ik òF¤â ÉL« - âUtŸSt®

ï¡fšÉah©oš nry« kht£l¤âYŸs mid¤J nkšÃiy¥gŸË khzt®fS« 100 rjåj« nj®¢á ÉG¡fh£oid¥ bgW« tifÆš nkšÃiy¡fšÉÆš cŸs 12 ghl§fS¡F Äf K¡»akhd nfŸÉfŸ k‰W« ÉilfŸ bjhF¤J tH§f¥g£LŸsd.

j§fŸ gŸËÆ‹ üW ÉG¡fhL nj®¢áÆid ïy¡fhf¡ bfh©L brašgLkhW nf£L¡bfhŸ»nw‹. khzt®fË‹ vâ®fhy« áw¡f áwªj gÆ‰áÆid tH§» ekJ kht£l¤âš nj®¢á ÉG¡fh£oid ca®¤âl mid¤J tifÆY« áw¥ghf¢ brašgl vdJ thœ¤J¡fis¤ bjÇÉ¤J¡ bfhŸ»nw‹.

bkJthf¡f‰F« khzt®fS¡F« mâf kâ¥bg©fis¥ bgw ÉU«ò« khzt®fS¡F« V‰w tifÆš Ñœ¡f©l 12 ghl§fS¡F f£lf§fŸ jahÇ¡f¥g£LŸsd.
1. jÄœ, 2. M§»y«, 3. fÂj«, 4. ïa‰ãaš, 5. ntâÆaš, 6. cÆÇaš, 7.Éy§»aš, 8. jhtuÉaš, 9. tuyhW, 10. bghUËaš, 11. tÂfÉaš, 12. fz¡F¥gâÉaš.

nry« kht£l khzt®fŸ muR bghJ¤nj®Éid vËjhf nj®î vGâ nj®¢á bg‰W mâf kâ¥bg©fŸ bgW« tifÆš áwªj mDgtÄ¡f k‰W« mâf nj®¢á ÉG¡fh£oid bg‰W¤ jªj KJfiy MáÇa®fË‹ FGÉid¡ bfh©L nry« b#auh« fšÿÇ k‰W« it°ah fšÿÇ Ã®thf¤â‹ rh®ghf jahÇ¡f¥g£l ï¡f£lf¤ij¥ ga‹gL¤â x›bthU khztU« nj®¢á bgw thœ¤J»nw‹. muR¥ bghJ¤ nj®Éš mid¤J khzt®fS« bt‰¿ bgw c§fŸ gŸË¤ jiyikaháÇa® bgUk¡fS«, MáÇa¥ bgUk¡fS« c§fS¡F cWJizahf ïU¥gh®fŸ. mt®fË‹ tÊfh£LjÈ‹go ï¡ifna£oid go¤J midtU« nj®¢á bgw thœ¤J»nw‹.

m‹òl‹

(ïuh.<°tu‹)
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

nry«
22-01-13

JAIRAM COLLEGE

## பகுதி - அ

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி
2. அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன
3. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் கோடிட்ட இடங்களை நிரப்புக.
4. மதிப்பெண்கள் 40X1-40

குறிப்பு: வணிகவியல் பாட நூலில் உள்ள 1 மதிப்பெண்கள் உள்ள கேள்விகள் அனைத்தும்.

## பகுதி - ஆ

1. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி
2. அனைத்து வினாக்களும் சம மதிப்பெண் உடையன
3. 10 X 4-40 மதிப்பெண்கள்

## பகுதி - இ

1. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
2. 5 X 8=40 மதிப்பெண்கள்
3. ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவிற்கு மிகாது விடையளிக்கவும்.

## பகுதி - ஈ

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.
2. 4X20-80 மதிப்பெண்கள்
3. ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று பக்க அளவிற்கு மிகாது விடையளிக்கவும்.

மிகவும் பின்தங்கிய மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற கற்கவேண்டிய பகுதிகள் முக்கிய பாடங்கள்

01. அமைப்பு
02. தனியாள் வணிகம்
03. கூட்டாண்மைத்தொழில்
07. கூட்டறவு அமைப்புகள்

## வேறுபாடுகள் (8 மதிப்பெண்கள்)

01. பொதுத்துறை - தனியார் துறை
02. முதலீட்டாளர்கள் - ஊக வணிகர்கள்

## வேறுபாடுகள் (20 மதிப்பெண்கள்)

01. தனியாள் வாணிகம் - கூட்டாண்மை
02. தனிவரையறு நிறுமம் - பொதுவரையறு நிறுமம்
03. கூட்டாண்மை - கூட்டுப்பங்கு நிறுமம்
04. கூட்டுப்பங்கு நிறுமம் - கூட்டுறவு அமைப்புகள்

## பகுதி - அ

1 மதிப்பெண்களுக்குரிய வினாத்தொகுப்பு

01. கொடுக்கப்பட்டிருக்கும் 20, சரியான விடை தேர்ந்தெடுக்கும் வினாக்கள்.
    20 X 1=20 மதிப்பெண்கள்
02. கொடுக்கப்பட்டிருக்கும் 20 கோடிட்ட இட நிரப்பு வினாக்கள்
    20 X 1=20 மதிப்பெண்கள்

## பகுதி - ஆ

4. மதிப்பெண்களுக்குரிய சிறுவினாக்களின் தொகுப்பு

01. கொடுக்கப்படும் 15 வினாக்களில் ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
02. 10 X 4=40 மதிப்பெண்கள்

JAIRAM COLLEGE

# வணிகவியல்
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

01. சிறு வினாக்கள் 10 X 4=40 மதிப்பெண்கள்

குறிப்பு 01. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க

02. ஒவ்வொரு வினாவிற்கும் 4 வரிகளுக்கு மிகாமல் விடையளி

## 01. சிறுவினாக்கள்
## பாடம் - 01 - அமைப்பு

### 01. அமைப்பை வரையறு

லூயிஸ் எச். ஹேனேவின் கூற்றுப்படி "அமைப்பு என்பது பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான, சிறப்புவாய்ந்த பகுதியினைச் சரிகட்டக்கூடிய ஒன்றாகும்.

### 02. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?

ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு "கட்டளை இணைப்பு" என்று பெயர்.

### 03. ''கர்த்தா'' என்பவர் யார்?

இந்து கூட்டு குடும்ப வணிகத்தை நடத்தும் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பு ஆகும்.

### 04. பொதுக் கூட்டுரு என்றால் என்ன?

இது பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட தனிச்சட்டங்களாலும் உண்டாக்கப் படுகின்றது. இது ஒரு சட்டமுறைக் கழகமாகும். சுயாட்சித் தன்மைகொண்ட அமைப்பு. எடுத்துக்காட்டு இந்திய ரிசர்வ் வங்கி,

### 05. பன்னாட்டு நிறுமத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகளைத் தருக.

01. யூனி லீவர் லிமிடேட் - பிரிட்டிஸ் நிறுமம்
02. யூனியன் கார்பைடு - அமெரிக்க நிறுமம்
03. ரிலையன்ஸ்- இந்திய நிறுமம்
04. கோகோ கோலா கழகம் - அமெரிக்க நிறுமம்

## பாடம் - 02 - தனியாள் வணிகம்

### 01. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளைக் கூறு.

01. தனியாள் வணிகம்
02. கூட்டாண்மை நிறுவனம்
03. இந்துக் கூட்டுக் குடும்பம்

### 02. தனியாள் வாணிக அமைப்பு என்றால் என்ன?

தனிநபரால் தனிநபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனியாள் வணிகம். - முனைவர் ஓ. ஆர் கிருஷ்ணசாமி.

### 03. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?

தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லை என்றால், தன் சொந்த சொத்துக்களை விற்று கடனீந்தோர்க்குச் செலுத்தவேண்டும்.

### 04. தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்களைக் கூறு.

01. குறைந்த மூலதனம் - இனிப்பு கடை, பெட்டிக்கடை
02. விரைவு முடிவு - பங்குதாரர், மருத்துவர்
03. குறைந்த இடர்பாடு - பழுதுபார்ப்பு, சில்லறை விற்பனை நிலையம்
04. தனி கவனம் - அழகு நிலையம், தையலகம்.

JAIRAM COLLEGE

## பாடம் - 03 - கூட்டாண்மைத் தொழில்

### 01. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.

"எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரே நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக்கொண்டவர்களிடையே நிலவும் உறவு" - பிரிவு 4, இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932.

### 02. கூட்டாளிகளிடையே நிலவும் உறவுமுறை யாது?

ஒப்பந்தத்தின் காரணமாக கூட்டாண்மை ஏற்படுகின்றது. கூட்டாளிகளிடையே ஒப்பந்த உறவும், முகமை உறவும் நிலவுகின்றன. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும் அதே சமயம் முகவராகவும் செயல்படுகின்றனர்.

### 03. உழையாக் கூட்டாளி என்பவர் யார்?

இவர் தொழிலில் முதலிடுவார். இவர் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவர் உறங்கும் கூட்டாளி அல்லது முதலிடும் கூட்டாளி என அழைக்கப்படுவார். வியாபாரத்தின் இலாப நட்டங்களில் பங்கெடுப்பார்.

### 04. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன?

ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும். இக்கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு கண்டிப்பாக வரையறாப் பொறுப்பாக இருக்கவேண்டும். இந்தியாவில் இவ்வகைக் கூட்டாண்மைக்கு அனுமதி இல்லை.

### 05. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு என்றால் என்ன?

கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய மொத்த கடன்தொகையை அனைத்துக் கூட்டாளிகளின் தனிச் சொத்துகளிலிருந்து பெற்றுக்கொள்வதே கூட்டுப் பொறுப்பு ஆகும். கடனீந்தோர் தங்களுக்குச் சேரவேண்டிய மொத்த கடன் தொகையை ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனி சொத்துக்கள் மீது வழக்கு தொடுத்து பெற்றுக்கொள்வதைத் தனிப்பொறுப்பு என்கிறோம்.

### 06. கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

01. கூட்டாண்மை கலைப்பிற்கு பிறகு தொழில் தொடர்ந்து நடைபெறும். ஆனால் நிறுவனக் கலைப்பிற்கு தொழிலை நடத்த இயலாது.

02. கூட்டாண்மைக் கலைப்பினால் நிறுவனக்கலைப்பு ஏற்படுவதில்லை. ஆனால் நிறுவனக்கலைப்பினால் கட்டாயமாக கூட்டாண்மைக் கலைப்பு ஏற்படும்.

## பாடம்-04 - நிறுமங்கள்

### 01. தனி வரையறை நிறுமம் - வரைவிலக்கணம் தருக.

தனிவரையறு நிறுமத்தில் குறைந்தபட்ச மூலதனம் ரூபாய் 1 லட்சம் ஆகும். இதன் குறைந்த பட்ச நபர்கள் இருவர். அதிகபட்ச நபர்கள் 50 - க்கு மிகாமல் இருக்கவேண்டும். பங்கு மாற்றத்திற்கும், தகவலறிக்கை வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. திறுமத்தின் பெயர் தனிவரையறு நிறுமம் என முடிய வேண்டும்.

### 02. கடனீட்டுப் பத்திரம் - வரைவிலக்கணம் தருக.

ஒரு கடனை ஒப்புக்கொள்ளும் அல்லது கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம் என்று கூறப்படுகின்றது.

### 03. வரையறு பொறுப்பு என்றால் என்ன?

நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு, அவர் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்தப்படாத தொகையின் அளவிற்கே வரையறுக்கப்பட்டுள்ளது. இது வரையறு பொறுப்பு ஆகும்.

### 04. பங்கு முனைமம் என்றால் என்ன?

ஒரு நிறுமம் தான் வெளியிடும் பங்குகளின் விலை பங்கு முகமதிப்பை விட அதிகமாக இருந்தால் அது பங்கு முனைமம் ஆகும். **எடுத்துக்காட்டு**: பங்கின் வெளியீட்டுவிலை ரூ120. பங்கின் முகமதிப்பு ரூ 100 பங்கின் முனைமம் ரூ 20

### 05. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?

பங்குகளை அவற்றின் முகமதிப்பிற்கும் குறைந்து வெளியிடுவது பங்குகளை வட்டத்திற்கு வெளியிடுதல் ஆகும். **எடுத்துக்காட்டு**: ரூபாய் 10 முகமதிப்பு உடைய பங்குகளை ரூ 9 க்கு வெளியிடுதல்.

### 06. அயல் நாட்டு நிறுமம் என்பதன் பொருள் என்ன?

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் ஆகும். இந்திய நிறுமச்சட்ட விதிகள் அனைத்தும் அதற்குப் பொருந்தும். **உதாரணம்**: 01. வால்மார்ட், 02 நோக்கியா, 03. பிலிப்ஸ்

JAIRAM COLLEGE

## பாடம்-05 - நிறுமங்கள்- II

### 01. சட்ட முறைக் கூட்டம் என்றால் என்ன?

ஒரு பொது வரையறு நிறுமத்தில் பங்குனர்களின் முதல் கூட்டம். இக்கூட்டம் நிறுமச் சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது நிறும வாழ்வு காலத்தில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் கூட்டம். தொழில் தொடங்க உரிமைபெற்ற 6 மாதங்களுக்குள் 1 மாதத்திற்குப்பின் இக்கூட்டத்தைக் கூட்டப்படவேண்டும்.

### 02. சட்டமுறை அறிக்கை என்றால் என்ன?

சட்டமுறைக் கூட்டத்திற்கு 21 நாட்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டிய அறிக்கை சட்டமுறை அறிக்கை எனப்படும்.

### 03. பகராள் என்றால் என்ன?

ஒரு பங்குநர், நிறுமம் நடத்தும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாதபோது, தனக்குப்பதிலாக கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்படும் நபரே பகராள் எனப்படுவார். இவர் பங்குநருக்கு பதிலாக கூட்டத்தில் கலந்துகொண்டு குறிப்பு எடுப்பர்.

### 04. கூட்டத்தில் ''குறைவெண்'' என்றால் என்ன?

ஏதேனும் பொருள் குறித்து செல்லத்தக்க வகையில் தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் கூட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ள வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் எனப்படும். தனிவரையறு நிறுமத்தில் இரு உறுப்பினர்களும், பொது வரையறு நிறுமத்தில் ஐந்து உறுப்பினர்களும் குறைவெண் ஆகும்

### 05. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?

கூட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல் என்று அழைக்கப்படுகின்றது. கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி நிறுமச் செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

### 06. நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?

நிறுமக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப்பெற்ற முடிவுகளின் உண்மையான, சரியான பதிவுகளை செய்யும் ஏடே நிகழ்ச்சிக் குறிப்பேடு. நிகழ்ச்சிக் குறிப்பு சுருக்கமாகவும், உண்மையானதாகவும் இருக்கவேண்டும். வர்ணனை வார்த்தைகளற்று எழுதப்படவேண்டும்.

### 07. மாற்று இயக்குநர் என்பவர் யார்?

இயக்குநரவை சாதாரணமாகக் கூடும் மாநிலத்திலிருந்து, 3 மாதங்களுக்குக் குறையாமல் இயக்குநர் ஒருவர் வெளிச்சென்று இருப்பதால், இயக்குநரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியாத நிலையில் மாற்று இயக்குநர் ஒருவரை இயக்குநரவை நியமித்துக்கொள்ளலாம்.

## பாடம்-06 - பங்கு மாற்றகம்

### 01. பத்திரம் என்றால் என்ன?

பத்திரம் என்பது ஒருவரின் உடைமை, உரிமை (பங்கு) அல்லது கடனீட்டு உரிமையை(கடன் பத்திரம்) குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஒரு ஆவணம்.

**எடுத்துக்காட்டு** : - கூட்டுப்பங்கு நிறுமப் பத்திரங்கள், - அரசு பத்திரங்கள்

### 02. பங்கு மாற்றகம் வரைவிலக்கணம்.

பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்காற்று) சட்டம் 1956 -ன் படி பங்கு மாற்றகம் என்பது பங்கு பாத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல், அவற்றைச் சீர்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட பதிவுபெற்ற அல்லது பதிவு பெறாத நிறுவனம் அல்லது தனிநபர்களின் அமைப்பாகும்.

### 03. பட்டியலிடுதல் என்றால் என்ன?

பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே 'பட்டியலிடுதல்' எனப்படும்.

இன்றைய நாளில் பட்டியலிடுதல் என்பது அனைத்துப் பொது நிறுமங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### 04. ஆயத்த கொடுப்பு ஒப்பந்தம் என்பதன் பொருள் யாது ?

ஆயத்த கொடுப்பு ஒப்பந்தங்களில் பத்திரங்களை வாங்கியவர் பணத்தையும், விற்றவர் பத்திரங்களையும் உண்மையாகவே பரிமாறிக்கொள்வர். இவற்றை அவ்விடத்திய பேரங்கள் என்பர்.

### 05. ஊக வணிகர் என்பவர் யார்?

எதிர்காலத்தில் இலாபத்துடன் விற்கும் நோக்குடன் தற்காலத்தில் பத்திரங்களை வாங்குபவர்களே ஊக வாணிகர்கள்.

இவர்கள் தாம் வாங்கிய பத்திரங்களை நீண்ட காலம்வரை வைத்திருக்கமாட்டார்கள். இவர்கள் உண்மையான முதலீட்டாளர்கள் அல்லர்.

### 06. 'போல்ட்' என்பது யாது ?

'போல்ட்' என்பது மும்பை பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும். உலக நாடுகளில் பலவற்றில் பங்கு வணிகத்திற்காக பின்பற்றப்படும் கலப்பின பலதரப்பட்ட வணிக முறைகளில் ஒன்றாகும்.

JAIRAM COLLEGE

## பாடம்-07 - கூட்டுறவு அமைப்புகள்

### 01. கூட்டுறவு அமைப்பு - வரையறு.

பி.சி.கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி, "கூட்டுறவு சங்கம் என்பது உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு".

### 02. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

- ✓இராபட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844 - ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்டேல் என்ற பெயரில் தொடங்கினார்.
- ✓இது முதன்முதலில் தொடங்கிய நுகர்வோர் கூட்டுறவு சங்கம் ஆகும்.
- ✓இராபர்ட் ஓவன் என்பவர் இந்த இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

### 03. ஒருநபர் - ஒருவாக்கு என்பதன் பொருள் யாது?

- ✓கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது.
- ✓உறுப்பினர் மூலதன பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒருவாக்கு மட்டுமே உண்டு.
- ✓ஆளுக்கொரு வாக்கு என்ற சமத்துவ அடிப்படையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

### 04. 'ஆதரவு பங்காதாயம்' என்றால் என்ன?

கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை உறுப்பினர்களின் பங்களிப்பு அடிப்படையில் பகிர்ந்தளிக்கிறது.

உறுப்பினர்கள் சங்கத்தை எந்தளவுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்களோ அந்த அடிப்படையில் மேலூதியம் வழங்கப்படுகின்றது. இதற்கு "பகிர்வு நீதி" என்று பெயர்.

### 05. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகள் - உதாரணம் தருக.

01. சென்னை - காமதேனு சிறப்பங்காடி
02. வேலூர் - கற்பகம் சிறப்பங்காடி
03. கோவை - சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி
04. திருச்சி - சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி
05. சேலம் - பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி
06. மதுரை - பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி
07. தஞ்சாவூர் - காவேரி கூட்டுறவு சிறப்பங்காடி

## பாடம்-08 - தொழில் துறையில் அரசு

### 01. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?

தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் அமைப்புகளை பல்வேறு காரணங்களால் தன் கட்டுப்பாட்டுக்குள் கொணர முடியாத போது, அரசு அந்த வணிக அமைப்புகளை பொதுமக்கள் நலனுக்காக ஏற்று நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொள்வதே நாட்டுடைமையாக்கம் அல்லது தேசியமயமாக்கம் எனப்படும்.

### 02. அரசு தொழில் - என்பதன் வரைவிலக்கணம் தருக.

S.S. கோரலின் கூற்றுப்படி, மத்திய அல்லது மாநில அரசுகள் தனியாகவோ அல்லது தனியார் துறைகளுடன் கூட்டாகவோ உற்பத்தி, வாணிகம் போன்ற போன்ற தொழில்களில் ஈடுபடலாம். சுய நிறைவு மேலாண்மையை பெற்றுள்ள அத்தகைய தொழில்களை அரசு தொழில்கள் எனலாம்.

### 03. பொது கழகத்தின் மேலாண்மை பற்றி குறிப்பிடுக.

பொதுகழகங்கள் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகின்றது. தகுதி, திறமை, அனுபவம் கருதி, இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

### 04. துறைமுறை அமைப்பு - எடுத்துக்காட்டு.

-அஞ்சல் - தந்தி, இரயில்வே துறை, தொலைக்காட்சி, தொலைபேசி - அணுசக்தி

### 05. பொது கூட்டுரு (அ) பொது கழகம் - எடுத்துக்காட்டு

இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய தொழில் நிதிக் கழகம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், அரசு வணிகக் கழகம்.

JAIRAM COLLEGE

## பகுதி - இ

### 8 மதிப்பெண்களுக்குரிய ஒருபக்க பெரு வினாக்களின் தொகுப்பு

**01. கொடுக்கப்படும் 8 வினாக்களில் ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**

**5x8=40**

**ஒருபக்க வினாக்கள் ஏதேனும் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்க**

## பாடம் - 01

### 01. இந்துக் கூட்டுக்குடும்பம் பற்றி சிறு குறிப்பு வரைக.

01. இந்து கூட்டுக் குடும்பம் என்பது ஒரே இடத்தில் வசித்து வழிபாடு நடத்தி ஒரே வகையான உணவு வகைகளை உண்டு ஒரே குடும்பத்தில் உள்ள சொத்தில் பங்கேற்பவர்.

02. இந்து கூட்டுக் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்றும், குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்றும் அழைக்கப்படும்.

03. இந்து குடும்ப வணிக முறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள், ஆகியோர் அடங்குவர். அவர்கள் வணிகத்தைக் குடும்பத்தலைவர் மூலம் நடத்துவர்.

04. இக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறு தொழிற்சாலை போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும்.

05. இவ்வணிகமுறை இந்துச் சட்டத்தின்படி கூட்டுருவாக்கப்பட்டு குடும்பச் சொத்தில் வாரிசு உரிமை உள்ள நபர்களால் நடத்தப்படுகின்றது. இந்த உறுப்பினர்களுக்குள் எந்த ஒப்பந்தமும் ஏற்படுவதில்லை.

06. இந்து சட்டத்தின்படி மகன், மகள், மகனின் மனன், மகனின் பேரன் அக்குடும்பத்தில் பிறந்ததன் மூலம் அக்குடும்பச் சொத்தில் கூட்டு வாரிசுதாரர்களாக கருதப்படுகிறார்கள். 1985 -ஆம் ஆண்டிலிருந்து இச்சட்டம் மகனைப் போலவே மகளுக்கும் சம உரிமை வழங்கிவருகின்றது.

07. அஸ்ஸாம் மற்றும் மேற்குவங்காளம் தவிர இந்தியா முழுவதும் மிட்டக்சாரா சட்டத்தின்படி ஒரு குடும்பத்தில் உள்ள ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமை உள்ளவர்கள்.

08. தாயபாகா சட்டத்தின்படி சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். சொத்தின் பங்கு பிறப்பின் மற்றும் இறப்பின் காரணமாய் மாறுபடுவதில்லை.

## பாடம் 02 - தனியாள் வாணிகம்

### 01. தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்களை விவரி.

**<u>தனியாள் வாணிகத்தின் குணாதிசயங்கள் பின்வருமாறு</u>**

01. குறைந்த முதல் - தனியாள் வாணிகத்தைத் துவங்க மிகவும் குறைந்த முதலே போதுமானது.

02. எளிமை- தனியாள் வணிகத்தைத் துவங்கலும், கலைத்தலும் எளிது, சட்டவிதிகளை அதிகம் பின்பற்ற வேண்டியது இல்லை.

03. உள்ளூர் வியாபாரம் - பெரும்பாண்மையான தனியாள் வணிகம் குறிப்பிட்ட தெரு, வட்டாரம் அல்லது கிராம அளவில் சில கிளைகளுடன் நடைபெறுகிறது.

04. வாழ்வு- தனியாள் வணிகருடைய இறப்பு, வியாபாரம் செய்யும் திறமையை இழத்தல், வாரிசு இல்லாமை அவர்தம் வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும். நீடித்த வாழ்வு கிடையாது.

05. பதிவு - தனி வணிகர் தன் தொழிலைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெறுதல், தொழில் துவங்கப் போதுமானது.

06. தனிச் சட்டம் - கூட்டாண்மை, கூட்டுப்பங்கு நிறுமம், கூட்டுறவு சங்கங்களை ஒழுங்குபடுத்த தனிச்சட்டங்கள் உள்ளதுபோல், தனி வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதும் இல்லை.

07. இலாப நட்டம் - தனி வணிகத்தின் முழு இலாபத்தை அனுபவிக்கும் உரிமை மற்றும் முழு நட்டத்தையும் ஏற்கவேண்டிய நிலை தனி நபருக்கே உரியது.

08. வரையறாப் பொறுப்பு- தனி வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதனால் தன் வியாபார கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களை விற்றுக் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.

JAIRAM COLLEGE

# பாடம்-03 - கூட்டாண்மைத் தொழில்

## *01. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவுசெய்யாமையின் குறைபாடுகள் யாவை?*

01. நிறுவனத்திற்கு எதிராகவோ, கூட்டாளிகளுக்கு எதிராகவோ மூன்றாமவர் எவரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளமுடியாது.

02. தன் கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

03. மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ரூபாய் நூறுக்குமேல் திரும்பப்பெற, நிறுவனம் தன்னுடைய உரிமையைச் செயல்படுத்தமுடியாது.

04. நிறுவனத்தைக் கலக்கக் கோருதல், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்களை விற்று பணமாகக் கோருதல், கலைப்பின்போது கணக்குகளைத் தீர்த்துக்கொள்ளுதல் ஆகியவற்றிற்காக கூட்டாளிகள் வழக்கு தொடுக்க முடியாது.

05. நிறுவனத்தின் வியாபாரக்குறிகள் மற்றும் பதிப்புரிமைகளைக் வெளியாட்கள் பயன்படுத்தக்கூடாது என தடுக்கும் உரிமையைக் கூட்டாண்மை இழக்கும்.

06. இந்நிறுவனம் தனக்கு சேரவேண்டிய நிலுவைப்பணத்தைப் பெற மூன்றாம் நபர் மீது எந்த உரிமையியல் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியாது.

07. நிறுவனத்திற்கு எதிராகவோ, ஏனைய கூட்டாளிகள் மீதோ முன்னாள் கூட்டாளி உட்பட கூட்டாண்மை உடன்பாட்டின் கீழ் அல்லது சட்டத்தின்கீழ் தனக்குள்ள ஒப்பந்த உரிமையை நிலைநாட்ட ஒரு கூட்டாளி இந்நிறுவனத்தின் மீது வழக்கு தொடரமுடியாது.

## *02. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன? அதில் உள்ள உள்ளடக்கம் யாது?*

கூட்டாண்மை என்பது உடன்பாட்டின் காரணமாக உருவாக்கப்படுகின்றது. இந்தியாவில் இந்த உடன்பாடு பேச்சளவிலோ அல்லது எழுத்து வடிவிலோ இருக்கலாம். எழுத்து வடிவத்தில் இருந்தால் பிற்காலத்தில் ஏற்படும் சச்சரவுகளைத் தவிர்க்கலாம். இதில் கூட்டாண்மை பற்றிய விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கி இருக்கும். உள்ளடக்கம் - கீழ்க்கண்ட செய்திகள் ஒரு கூட்டாண்மையின் ஒப்பாவணத்தில் வழக்கமாகக் காணப்படும்.

01. நிறுவனத்தின் பெயர்.
02. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்.
03. அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி.
04. நிறுவனம் செய்யப்போகும் தொழில்.
05. கூட்டாண்மையின் காலவரையறை
06. கூட்டாளிகள் வழங்கிய முதல்.
07. கூட்டாளிகள் எடுக்கும் தொகை.
08. இலாப பகிர்வு விகிதம்.
09. உழைக்கும் கூட்டாளிகளின் ஊதியம்
10. முதல் மற்றும் எடுப்பு மீதான வட்டி.
11. கூட்டாளி சேர்ப்பு மற்றும் விலகல் அதன் நடைமுறைகள்
12. கணக்குகளைப் பராமரிக்கும் முறை மற்றும் தணிக்கை
13. கூட்டாளிகள் வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீதான வட்டி.
14. நிறுவன கலைக்கும் முறை, கணக்குகளை தீர்க்கும் முறை.

## *03. இளவர் என்பவர் யார்? கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலைபற்றி விவரி?*

18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம். ஆனால் நீதிமன்றத்தால் ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயதுவரை அவர் இளவராக கருதப்படுகிறார்.

***<u>கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை</u>***

சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது. ஆனால் அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் கூட்டாண்மையின் நன்மைகளுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக்கொள்ளப்படுவார்.

### 01. உரிமை வயது அடையும் முன் இளவரின் நிலை

இளவர் தொழிலின் சொத்துக்கள் மற்றும் இலாபத்திலும் ஒப்புக்கொண்ட விகிதத்தில் பங்குபெறும் உரிமை உடையவர்.
அவருக்கு நிறுவனக் கணக்குகளைப் பார்வையிட்டு நகல் எடுக்க உரிமை உண்டு.
எந்த அளவிற்கு முதலீடு செய்கின்றாரோ அந்த அளவிற்குத்தான் நிறுவன கடன்களுக்கு பொறுப்பாவர்.

### 02. உரிமை வயது அடைந்தபின் இளவரின் நிலை

உரிமை வயதை அடைந்தபின் கூட்டாளியாக தொடர்ந்து இருக்க வேண்டுமா அல்லது வெளியேற வேண்டுமா என்பதை 6 மாதத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

6-மாதத்திற்குள் அறிவிக்காவிடில் கூட்டாண்மையில் இளவராக சேர்ந்த நாள்முதல் நிறுவன கடன்களுக்கு பொறுப்பாவர்.

JAIRAM COLLEGE

### *04. கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விவரி.*

**கூட்டாளிகளின் வகைகள்.**

**01. உழைக்கும் கூட்டாளி** : தொழிலில் முதலீடு செய்து, நிர்வாகத்தில் பங்கேற்று, இலாப நட்டங்களில் பங்கேற்கும் கூட்டாளி உழைக்கும் கூட்டாளி ஆவார். இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.

**02. உழையாக் கூட்டாளி அல்லது உறங்கும் கூட்டாளி** : உழையா' கூட்டாளி தொழிலில் முதலிடுவார். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்குபெற மாட்டார். ஆனால் இலாப நட்டங்களில் பங்கேற்பார்.

**03. பெயரளவு' கூட்டாளி அல்லது பாசாங்கு கூட்டாளி** : பெயரளவு கூட்டாளி தொழிலில் முதலிடுவதில்லை. நிர்வாகத்தில் பங்கெற்பதில்லை. இலாப நட்டத்தில் பங்கேற்பதில்லை. ஆனால் வியாபாரக் கடன்களுக்கு இவர் பொறுப்பாகிறார். தன் பெயரைப் பயன்படுத்த அனுமதித்து கூட்டாண்மையின் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள உதவுகிறார்.

**04. முரண்தடைக்கூட்டாளி** : இவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லை. தன் நடத்தையின் மூலம் தானும் அத்தொழிலில் ஒரு கூட்டாளி என வெளியாரை நம்பச் செய்த பின், தான் கூட்டாளி அல்ல என பிறகு அவர் மறுத்துக்கூற முடியாது. அவரை நம்பி நிறுவனத்திற்கு முன்பணம் அளிப்பவருக்கும் நிறுவனத்தோடு ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்க்கும் அவர் பொறுப்பாகிறார்.

### *05. கூட்டாளிகளின் உரிமைகள் யாவை?*

**கூட்டாளிகளின் உரிமைகள்**

01. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் மேலாண்மை செய்யவும் உரிமை உண்டு.
02. நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தங்கள் கருத்தினைத் தெரிவிக்கும் உரிமையுண்டு.
03. முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் ஒவ்வொரு கூட்டாளியும் தங்களைக் கலந்து ஆலோசிக்க கோர உரிமையுண்டு.
04. கூட்டாளிகள் நிறுவன ஏடுகளை, கணக்குகளைக் கண்காணித்து நகல் எடுக்கும் உரிமை உண்டு.
05. கூட்டாளிகள் இலாபத்தில் சமமாகவோ அல்லது ஒப்புகொண்ட விகிதப்படி பங்குபெற உரிமையுண்டு.
06. கூட்டாளிகள் அன்றாட வியாபாரத்திற்குத் தாம் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமையுண்டு.
07. கூட்டாளிகள் தொழிலுக்காக நிறுவன சொத்துக்களை பயன்படுத்த உரிமையுண்டு.
08. கூட்டாளி தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன் பணம் மீது 6 சதவீகிதம் வட்டி பெற உரிமையுண்டு.

**06. கூட்டாளிகளின் கடமைகள் யாவை?**

**கூட்டாளிகளின் கடமைகள்**

01. கூட்டாளிகள் தங்களுடைய கடமைகளைக் கவனமாகவும், குறைவின்றியும், நாணயமாகவும் மற்ற கூட்டாளிகளின் நலனுக்காக நிறைவேற்றவேண்டும்.
02. ஒவ்வொரு கூட்டாளியும் மற்ற கூட்டாளிகளிடம் உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.
03. கூட்டாளிகள் தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரவரம்புக்குள் செயல்படவேண்டும்.
04. மற்ற கூட்டாளிகளின் சம்மதமின்றி கூட்டாளி ஒருவர் தன் பங்கினைப் பிறருக்கு மாற்றக்கூடாது.
05. கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக நடத்தக்கூடாது.
06. கூட்டாளிகள் நிறுவன தொழில் சார்ந்த கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்கவேண்டும்.
07. நிறுவன சொத்துக்களை நிறுவன தொழிலுக்காகவும் மற்ற நன்மைக்காகவும் மட்டுமே பயன்படுத்தவேண்டும்.
08. எக்கூட்டாளியும் கொள்முதல் மீதான தரகு அல்லது விற்பனை தரகு போன்ற இரகசிய இலாபங்களை ஈட்டக்கூடாது.

## *பாடம்-04 - நிறுமங்கள்*

### 01. நிறும அமைப்பு முறையின் சிறப்புத் தன்மைகளை விவரி.

**01. தன்னிச்சையான சட்டநபர் தன்மையுடையது**

நிறுமம் என்பது சட்டம் உருவாக்கிய நபர். அதாவது 1956- ஆம் ஆண்டைய நிறுமங்கள் சட்டம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி ஏற்படுத்தப்படுகிறது. தனக்கென்று தனி ஆளுமைத் தன்மையை உடையது. அதாவது அதன் உறுப்பினர்களின்றும் வேறுபட்டுத் தன்னிச்சையாக செயல்படும் தனிநபர் தன்மையை நிறுமம் பெற்றுள்ளது. நிறுமம் வேறு. உறுப்பினர் வேறு. சொத்தைத் தன்பெயரில் வாங்கவிற்க உரிமை உள்ளது. தனது பெயரில் வழக்கு தொடுக்க முடியும்.

**02. நீடித்த வாழ்வு**

உறுப்பினராக நிறுமத்திற்கு வரலாம். அல்லது உறுப்பினர் நிலையை விட்டுவிட்டு செல்லலாம். நிறுமம் தொடர்ந்து இயங்குவது நிறும தோற்றுவிப்பாளரிடமிருந்து வேறுபட்டு உள்ளது. உறுப்பினர் மாற்றமோ, மறைவோ நிறுமத்தைப் பாதிப்பதில்லை. எனவே நீடித்த வாழ்வு உடையதாக செயல்படும்.

JAIRAM COLLEGE

### 03. பொது இலச்சினை அல்லது பொது முத்திரை

நிறுமம் தனி நபர் தன்மையைச் சட்டம் அங்கீகரிக்கப்படினும், மனிதர்களின் உதவியுடன் மட்டுமே இயங்கும். அதற்கு உயிர், உடலில்லை. சட்டம் உருவாக்கிய நபர். எனவே பத்திர ஒப்பந்தத்தில் கையொப்பம் இடமுடியாது. இதற்கு ஒரு பொதுமுத்திரை உண்டு, பொது முத்திரையை ஒரு பத்திரத்தில் பதித்தால் நிறுமம் கையெழுத்திட்டதாகும்.

### 04. வரையறு பொறுப்பு

உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. பொதுவாக ஒருவர் வைத்திருக்கும் பங்கு மீது பெறாத தொகை அளவில் பொறுப்பு உள்ளது.

## *பாடம்-05 - நிறுமங்கள்*

### *01. அமைப்பு முறையேடு என்றால் என்ன? அதன் உள்ளடக்கங்கள் யாவை?*

***பொருள்***

எந்த அடிப்படை நிபந்தனைகளுடன் ஒரு நிறுமம் உருவாக்கப்பட்டுள்ளதோ அவற்றை உள்ளடக்கியது, அமைப்பு முறையேடாகும். எந்தெந்த நடவடிக்கைகளில் நிறுமம் ஈடுபடலாம் என இது வரையறை செய்கிறது.

***உட்பிரிவுகள்***

### *01. பெயர் தெரிந்த உட்பிரிவு*

இப்பிரிவு நிறுமத் தனித்தன்மையைப் பிறருக்கு அடையாளம் காட்டுகிறது. பிற நிறுமத்தின் பெயருடன் ஒத்திருத்தல் கூடாது. பொது வரையறு நிறுமமாக இருந்தால் அதன் பெயர் முடிவில் "வரையறுக்கப்பட்டது" என்றும் தனி வரையறு நிறுமமாக இருந்தால் அதன் பெயர் முடிவில் "தனி வரையறுக்கப்பட்டது" என்றும் முடிய வேண்டும்.

### 3. இடங்குறித்தல் உட்பிரிவு

இப்பிரிவில் நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். ஆனால் மாநிலத்திற்குள் அமைந்திருந்தால் நிறுமத்தின் உண்மை முகவரி குறிப்பிடத்தேவையில்லை.

### 3. நோக்கம் குறித்த உட்பிரிவு

இதில் நிறுமத்தின் நடவடிக்கைகள் குறிப்பிடுவதால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாகும். நிறுமத்தின் அதிகபட்ச செயல்பாட்டு எல்லையை வகுக்கிறது. நிறுமம் இதில் குறிப்பிட்ட வணிக நடவடிக்கையை மட்டுமே மேற்கொள்ள இயலும்.

### 4. பொறுப்பு குறித்த உட்பிரிவு

இங்குதான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டுவருவதாக உறுதியெடுத்துக் கொண்ட தொகை இங்கு குறிப்பிடப்படும்.

### 5. முதல் குறித்த உட்பிரிவு

எப்பங்கு முதலுடன் நிறுமம் பதிவு செய்யப்படுகிறது என்ற விவரமும் முதல் தொகை குறிப்பிட்ட மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ள விவரமும் இங்கு கொடுக்கப்படுகின்றன.

### 6. அமைப்பு அல்லது உடன்பட ஒப்பும் உட்பிரிவு

தனி வரையறு நிறுமமாயின் குறைந்தது இரு நபர்களும், பொது வரையறு நிறுமமாயின் குறைந்தது ஏழு நபர்களும் குறிப்பிட்ட பங்குகளை வாங்கிக்கொள்ள உடன்பட்டு கையொப்பம் இடுகின்றனர்.

### *2. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை?*

01. நிறுமச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள - அட்டவனை A எந்தளவிற்கு இந்நிறுமத்திற்குப் பொருந்தாது என்பதை நிறுமம் தனக்கென வகுக்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிடவேண்டும்.
02. தொடக்க ஒப்பந்தங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் குறித்து.
03. பங்கு முதல், பங்குகளின் பல்வேறு வகைகள், அவற்றின் உரிமைகள்.
04. பங்குகள் ஒதுக்கீடு, பங்குகள் மீதான அழைப்பு தொடர்பானவை.
05. பங்குகள் ஒறுப்பிழப்பு, பங்குகள் மறுவெளியிடு செய்தல்.
06. பங்குச் சான்றிதழ்கள், பங்கானைகள் அனுப்புதல் குறித்து.
07. பங்கு மாற்றம், அல்லது வாரிசுமுறை மாற்றம் குறித்தவை.
08. பங்குகளைப் பங்கிருப்பாக மாற்றுதல்.
09. பங்கு அல்லது கடன் பத்திர வெளியீட்டில் ஒப்புறுதியாளர்கட்கு தரவேண்டிய தரகுத் தொகை.
10. பங்கு முதலை மாற்றி அமைத்தல்.
11. இயக்குநர் நியமனம், தகுதி, ஊதியம் குறித்து.
12. இயக்குநர்களின் கடன் வாங்கும் அளவு.
13. நிறுமத்தின் பொது இலச்சினையைப் பயன்படுத்தும் விதிமுறைகள்.
14. இயக்குநர் அவை கூட்டங்கள்.
15. பங்காதாயம் வழங்குதல், காப்பு ஏற்படுத்துதல்.
16. நிறுவன கலைப்பு.

JAIRAM COLLEGE

### *3. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.*

1. வட்டத்தில் வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.
02. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும்.
03. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.
04. நிறுமம் நிறைவேற்றிய தீர்மானத்தில் உயர்ந்தளவு தள்ளுபடிவீதம் எந்தளவில் இருக்கவேண்டும் என்பதை குறிப்பிட்டுக் காட்டவேண்டும். பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு மிகக் கூடாது.
05. நிறுமம் தொழில் தொடங்க உரிமை கிடைத்த நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும்.
06. மைய அரசு அனுமதித்த நாளிலிருந்து இரு மாதங்களுக்குள் பங்குகளை வட்டத்தில் வெளியிட வேண்டும்.

## *பாடம்-06. பங்கு மாற்று நிலையம்*

### *01. முதலீட்டாளர்கள், ஊகவணிகர்கள் - வேறுபாட்டினை விவரி.*

#### *முதலீட்டாளர்கள்*

1. தங்களின் முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவர்.
2. தங்கள் முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர்.
3. பத்திரங்களை வாங்கும்போது பணத்தைக் கொடுத்துப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார் பத்திரங்களை விற்கும்போது பத்திரங்களைக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்வார்.
4. நீண்ட காலத்துக்குப் பத்திரங்களைத் தம்மிடம் வைத்திருப்பர். அதாவது நீண்டகால ஈடுபாடும், பொறுப்பும் உள்ளவர்.
05. இடர்பாடு குறைவு.
06. நிலையான வருவாய்.

#### *ஊக வணிகர்கள்*

01. தங்களின் முதலீடுகளின் மதிப்பு அதிகரிப்பதையும், இலாபம் பெறுவதையுமே விரும்புவர்.
02. பத்திரங்களை வாங்கி விற்பதன்மூலம் கிடைக்கும் இலாபத்தையே விரும்புவர்.
03. பத்திரங்களின் உரிமையை பெறுவதோ, அல்லது தருவதோ இல்லை.
04. பத்திரங்களை உடனடியாக விற்கவோ, வாங்கவோ முயற்சிப்பார். அதாவது குறைந்த கால ஈடுபாடும், பொறுப்பும் உள்ளவர்.
05. இடர்பாடு அதிகம்.
06. நிலையற்ற ஆதாயம்.

### *2. ஊக வணிகர்களின் வகைகளை விவரி.*

**01. காளை**

- ✓ பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார்.
- ✓ இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார்.
- ✓ இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

**02. கரடி**

குறிப்பிட்ட பத்திரங்கள் எதிர்காலத்தில் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார்கள்.

இவர் எதிர்காலத்தில் பங்குகளைக் குறைந்த விலையில் வாங்க இயலும் என்ற எண்ணத்தில் தான் கொண்டிராத பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வார்.

ஒரு கரடி வகை ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**3. கலைமான்**

கலைமான் வகை ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடைய ஊக வணிகர். இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விருப்புகளில் பங்கு கோரி விண்ணப்பம் செய்து, தனக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டவுடன் அவற்றை முனைமம் பெற்றுக்கொண்டு விடுவார். இவர் முனைம வேட்டையாளர்' என்றும் அழைக்கப்படுகிறார்.

**04. முடவாத்து**

தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு கரடி வகை ஊக வணிகரே முடவாத்து என்று அழைக்கப்படுகிறார்.

ஒரு கரடிவகை ஊக வணிகர் பின்னர் கொடுப்பதற்காக தான் கொண்டிராத பங்குகளைத் தற்போது விற்பனை செய்வார்.

ஆனால் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட பங்குகளை எந்த விலையிலும் எவரும் விற்க விரும்பாத நிலையில் எந்தவொரு பங்கும் கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.

## *பாடம்-07. கூட்டுறவு அமைப்பு*

### *1. கூட்டுறவு அமைப்பின் குறைபாடுகளை விவரி.*

**1. திறமையற்ற மேலாண்மை**

கூட்டுறவு சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அச்சங்கங்களை மேலாண்மை செய்ய போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

**2. வரையறு முதல்**

குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. "ஒருநபர் ஒருவாக்கு" முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதைத் தடைசெய்கிறது.

**3. தக்க தூண்டு கோல் இல்லாமை**

இலாப-நோக்கு இல்லாமையும் குறைந்தபட்ச 9 விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்பு குறைய காரணமாகிறது.

**4. ஒற்றுமையின்மை**

சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை.

**5. அசைக்க முடியாத மனிதர்களின் அதிகாரம்**

அரசியல் சார்பில்லாத கூட்டுறவு சங்கத்தில் சில உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கோடு சங்கங்களை மேலாண்மை செய்கின்றனர்.

**6. உரிமையை மாற்ற இயலாமை**

கூட்டுறவு சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைச் சங்கத்தில் திருப்பிக் கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்ப பெறலாம்.

**7. இரகசியம் காவாமை**

கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகள் சங்க கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு உறுப்பினரும் சங்க ஏடுகளை பார்வையிட அதிகாரம் உண்டு. இதனால் இரகசியம் காக்க இயலாது.

**8. கடன் வசதியின்மை**

உறுப்பினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை.

### *2. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து சிறப்பியல்புகளை எழுதுக.*

**பொருள்**

M.M.ஜிம்மர் மேன் அவர்கள் சிறப்பங்காடிகள் பற்றி வரையறை செய்யும்போது, சில்லறை விற்பனை செய்யும் துறைவாரி அமைப்பு நான்கு அடிப்படைத் துறைகளைக் கொண்டது. அதாவது மளிகைப்பொருள் சுய சேவை பிரிவு, மாமிசப் பிரிவு, பால் பண்ணைப் பொருட்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் விற்பனை செய்யுமிடம் சலுகை அடிப்படையில் துறைகளைக் குத்தகைக்கு ஏற்று நடத்துமிடம்.

**சிறப்பியல்புகள்**

1. பேரளவு சில்லரை விற்பனை செய்யும் அமைப்பு.
2. பலவகையான பொருட்கள் கிடைக்குமிடம்.
3. சுய சேவை பிரிவு முறையில் நடத்தப்படுகிறது.
4. சுயசேவை பிரிவில் விற்பாண்மையர் தேவை ஏற்படுவதில்லை.

JAFFNA COLLEGE

5. இதன் தோற்றம் பல துறைகளை கொண்டது.
6. ரொக்க விற்பனை அடிப்படையில் வியாபாரம் செய்யப்படும்.
7. பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு, பல கட்டுமங்களில் விற்கப்படுகின்றன.
8. பொருட்களில் கலப்படம் தவிர்க்கப்படுகின்றது.
9. சரியான அளவைகளில் பொருட்கள் விற்கப்படுவதால் நுகர்வோர்கள் குறைந்தஅளவையால் ஏமாற்றப்படுவதில்லை.
10. அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

# பாடம் - 8 தொழில் துறையில் அரசு

## 1. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| வ. எண் | வேறுபாடுகள் | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | சேவை நோக்கம், பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையை ஏற்படுத்துதல். | இத்துறை இலாப நோக்கத்தை மட்டுமே கொண்டு செயல்படுகிறது. |
| 2 | நிதி | போதிய அளவு மற்றும் வரையறா நிதி, மக்களின் சேமிப்பை வங்கி, கடன் பத்திரம் வாயிலாக திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி. நாட்டு மக்களின் சேமிப்பைத் திரட்டுவதோ வெளிநாட்டிலிருந்து உதவி பெறுவதோ இதற்கு எளிதல்ல. |
| 3 | பொருளாதார செறிவு | ஒருசிலரிடம் செல்வமும் வருமானமும் செறிவடைவதைத் தடுக்கிறது. | ஒருசிலரிடம் பொருளாதார வலிமை செறிவடைவதைத் தூண்டுகிறது. |
| 4 | புறக்கணிக்கப்பட்ட தொழில்கள் | தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்று நடத்துகிறது. | அபாயம் குறைவாக உள்ளதும், இலாபம் அதிகமாக உள்ள தொழில்களை மட்டுமே ஏற்று நடத்துகிறது. |
| 5 | . நாட்டின் வளம் | நாட்டின் வளங்களைப் பாதுகாக்கிறது. | காடுகள், சுரங்கங்கள் போன்ற நாட்டுவளங்களைத் தன்சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| 6 | பின்தங்கிய பகுதிகள் | பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனத்தைத் தொடங்கி அனைத்துப் பகுதிகளுக்கும் சமமாக வளர்ச்சிபெற செய்கிறது. | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்பவில்லை |
| 7 | தொழில் தன்மை | அடிப்படைத் தொழில்கள், இராணுவம் சார்ந்த தொழில்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறையில் உள்ளது. | நுகர்வோர் பொருட்கள், விவசாயம், போன்றவை தனியார் துறைக்கு விடப்பட்டுள்ளன. |
| 8 | நுகர்வோர் நலன் | நுகர்வோர் நலனைக் காப்பது இதன் தலையாய பணி. அவர்களுக்கு தரமான பொருட்களையும், பணியினையும் குறைந்த விலையில் வழங்குகிறது. | நுகர்வோர்கள் சுரண்டப்படுகின்றனர். |

JAIRAM COLLEGE

# *பகுதி - ஈ*

## *20 மதிப்பெண்களுக்குரிய மூன்றுபக்க பெருவினாக்களின் தொகுப்பு*

**கொடுக்கப்படும் மாற்றுவினாக்களை கருத்தில் கொண்டு 4 வினாக்களுக்கு விடைதரவேண்டும். . 4X20=80 மதிப்பெண்கள்.**

## *பாடம்-01 அமைப்பு*

### *01. அமைப்பின் கோட்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்க.*

**அமைப்பின் கோட்பாடுகள் பின்வறுமாறு**

**1. நோக்கங்களின் ஒருமை**

ஒரு அமைப்பு நிறைவேற்ற இருக்கும் நோக்கம் என்பது இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு நிர்வாகத்தின் அமைப்பானது அதன் குறிக்கோள்களைத் தெளிவாக முடிவுசெய்யவேண்டும்.

**2. வேலைப்பகிர்வு**

தொழில் அமைப்பின் மொத்தப் பணிச்சுமையையும் பகிர்வு செய்யவேண்டும். இது துறைப்படுத்துதல் என்று அழைக்கப்படுகின்றது. அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும். ஒரு சக்தி வாய்ந்த அமைப்பிற்கு சிறப்பீடுபாடு ஏற்புடையதாகும்.

**3. கட்டுப்பாட்டு வீச்செல்லை**

ஒரு அமைப்பின் மேலாண்மையர் தனக்குக் கீழ் பணியாற்றக்கூடிய பணியாளர்களை அதிக அளவில் நிர்வகிக்க இயலாது. ஒரு அதிகாரி எத்தனைப் பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை இது குறிக்கும்.

**4. தரவரிசைக் கோட்பாடு**

ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வரவேண்டும். இதற்கு "கட்டளை இணைப்பு" என்று பெயர்.

**5. கட்டளையொருமை**

ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை உயர் அதிகாரியிடமிருந்து பெறவேண்டும். ஒரு பணியாளர் இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம். பணியாளர் தன் மேல் அதிகாரிக்கு பொறுப்பாவார். இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ்ப்பணியாற்றுவது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

**6. பணிவழி வரைவிலக்கணம்**

ஒவ்வொரு பணியாளரின் ஆணையுரிமையும், பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். அனைத்து பணிகளுக்கிடையே உள்ள தொடர்புகளைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**7. ஒருமுனை இயக்கம்**

அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் ஒரு தலைமையும், ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும்.

**8. ஒருங்கிணைத்தல்**

ஒரு அமைப்பின் விரும்பத்தக்க இலக்குகளை அடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டும்.

**9. அதிகார ஒப்படைவு**

ஒப்படைவு என்பது பணிகளின் ஒரு பகுதியை அல்லது சில கடமைகளைக் கீழ்ப் பணியாளர்களுக்கு ஒப்படைப்பதாகும். ஒரு உயர் அலுவலர் தனக்குக் கீழ்ப் பணியாற்றும் பணியாளர்களுக்கு சில பணிகளை ஒப்படைக்கிறார். அதை நிறைவேற்ற அவருக்குத் தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்கவேண்டும்.

**10. பொறுப்பு கோட்பாடு**

ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாகிறார். அவர்தம் கடமையிலிருந்து முற்றிலும் தப்பிக்க இயலாது. தன் மேலதிகாரிகளுக்குப் பொறுப்பாகிறார்.

**11. நெகிழ்வுத் தன்மை**

ஒரு அமைப்பு பற்றி அமைக்கக்கூடிய வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் இருக்கவேண்டும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்கவேண்டும்.

**12. திறமை**

திறமையான முறையில் குறைந்த செலவில் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் அமைப்பின் வடிவமைப்பு இருத்தல் வேண்டும்.

### *02. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.*

**1. தனிநபர் நிறுவனங்கள்**

1. தனிவணிகம், 2, இந்துக் கூட்டுக் குடும்பம், 3, கூட்டாண்மை, 4, கூட்டுப்பங்கு நிறுமம், 5, கூட்டுறவு அமைப்புகள், 6, பன்னாட்டு நிறுவனங்கள், 7, அரசு நிறுவணங்கள்.

JAIRAM COLLEGE

### 1. தனி வணிக நிறுவனங்கள்

தனி நபரால் உருவாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படும் வியாபார அமைப்பு தனி வணிக அமைப்பாகும். தொழில் அமைப்புகளில் மிகப் பழமையானது. தனி நபரே அனைத்துக் கொள்முதல் மற்றும் விற்பனை செய்து கணக்குகளைப் பராமரிக்கிறார். தொழிலில் கிடைக்கும் அனைத்து இலாப நட்டங்களும் அவரைச் சேரும். தனி வணிகம், "எல்லாம் அவரே, அவரே எல்லாம்" என்ற கோட்பாட்டில் நடைபெறுவதாகும். அவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும். தொழில் தொடங்குவது எளிது.

### 2. இந்துக் கூட்டுக்குடும்பம்

இவ்வணிக முறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். இது இந்து சட்டத்தின்படி செயல்படுகிறது. குடும்பத்தலைவர் "கர்த்தா" மூலம் வணிகத்தை நடத்துவர். இதன் உறுப்பினர்களுக்கு "கூட்டு வாரிசுதாரர்" என்று பெயர். 1985- ஆம் ஆண்டின் சட்டத்திருத்தத்தில் இந்து சட்டம் மகனைப் போல மகளுக்கும் சம உரிமை வழங்குகிறது. 'மிட்டக்சாரா' சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டும் வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள். அஸ்ஸாம், மேற்குவங்காளம் தவிர இந்தியா முழுமைக்கும் இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. "தயாபகா" சட்டத்தின்படி சொத்தின் உரிமை மாற்றம் கூட்டுவாரிசுதாரர்களின் வாரிசுகளுக்கு வாரிசுரிமையின்படி ஏற்படுவதாகும்.

### 3. கூட்டாண்மை

கூட்டாண்மை என்பது தகுதிவாய்ந்த நபர்களிடைய உறவு முறையை ஏற்படுத்தி சட்டமுறையான வியாபாரம் நடத்தி, தகுந்த ஒப்பந்தங்களின் மூலம் தனிப்பட்ட இலாபங்களுக்கு நடத்துவதேயாகும். கூட்டாண்மை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஒப்பந்தத்தின்மூலம் ஏற்படுத்தப்படுவதாகும். கூட்டாளிகள் நிறுவனக் கடன்களுக்கு தனித்தனியாகவும், கூட்டடாகவும் பொறுப்பேற்க வேண்டும். கூட்டாளிகள் இலாபநட்டங்களை ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். எல்லாக் கூட்டாளிகளும் மேலாண்மையில் பங்குகொள்ள உரிமை உண்டு. கூட்டாண்மையில் பங்குபெறுபவர்கள் "கூட்டாளி" என்று அழைக்கப்படுவர்.

### 4. கூட்டுப்பங்கு நிறுமம்

கூட்டுப்பங்கு நிறுமம் என்பது பல நபர்களின் சங்கமாகும். நிறுமத்தின் முதல் பல அலகுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அலகுக்கும்"பங்கு" என்று பெயர். தனி நபர் தன்மையுடனும், சட்டத்தால் உருவாக்கப்பட்டதும், பொது முத்திரையுடனும், நிலைப்பேற்றுத் தொடர்ச்சியுடன் கூடிய அமைப்பாகும். 1956 -இந்திய நிறுமச் சட்டத்தின்படி ஒரு நிறுமம் கட்டாயம் பதிவு செய்யப்பட்டு இருக்கவேண்டும். நிறுமத்தின் பங்குகள் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு எளிதில் மாற்ற முடியும். இதன் மேலாண்மை பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

### 5. கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவுச் சங்கம் என்பது, நபர்கள் தாமாகவே தங்களுக்கு அமைத்துக்கொள்ளும் சங்கமாகும். உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் பொருளாதார நலனைக் கருதி ஒன்றுசேரும் தன்விருப்ப மன்றமாகும். இதில் உறுப்பினர்கள் அனைவரும் சமம். "ஒரு நபர்- ஒருவாக்கு" என்ற கோட்பாட்டின்படி மேலாண்மை குழு மூலம் இவ்வமைப்பு நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கமும் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

### 06. பன்னாட்டு நிறுவனங்கள்

பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.

### சிறப்பியல்புகள்

01. ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்., 02. இது மிகப்பெரிய அளவில் செயல்படும்.

### எடுத்துக்காட்டு

1. யூனி லீவர் லிமிடெட், 2. யூனியன் கார்பைடு, 3. பிலிப்ஸ், 4. கோகோகோலா

### அரசு நிறுவனங்கள்

### 1. துறைமுறை அமைப்பு

இது அரசாங்கத்தின் அமைச்சகத்தால் நடத்தப்படும் அமைப்பாகும். அமைச்சகத்தின் நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இது மத்திய அல்லது மாநில அரசாலோ நடத்தப்படுவதாகும். உதாரணம்- ரயில் போக்குவரத்து, தொலைபேசி

### 2. பொதுக்கூட்டுறு

இது பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட தனிச் சட்டங்களால் உருவாக்கப்படுவதாகும். இது ஒரு சட்டமுறைக் கழகமாகும். அரசாங்கத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டு சுய ஆட்சித் தன்மை கொண்ட அமைப்பாகும். உதாரணம் - இந்திய ரிசர்வ் வங்கி.

### 3. அரசு நிறுமங்கள்

அரசு நிறுமம் 1956 -இந்திய நிறும சட்டத்தின்படி உருவாக்கப்பட்டதாகும். இதன் செலுத்திய பங்கு முதலில் 51 - சதவிகிதம் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ வைத்திருக்குமானால் அது அரசு நிறுமமாகும். உதாரணம் - பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ், இந்துஸ்தான் ஸ்டீல்ஸ்

JAIRAM COLLEGE

**4. வாரிய அமைப்பு**

இந்த அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச் சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

**உதாரணம்** : 1. தமிழ்நாடு மின்சார வாரியம். 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். 3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

## *பாடம்-02 தனியாள் வணிகம்*

### *1. தனியாள் வணிகத்தின் நன்மை குறைபாடுகளை விவரி.*

**நன்மைகள்**

**1. எளிதான அமைப்பு** : தொழிலமைப்பு வடிவங்களில் தனியாள் வணிகத்தை மட்டுமே சட்ட சிக்கல்கள் ஏதுமின்றி துவக்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்குத் தேவையில்லை.

**2. நேரடி ஊக்குவிப்பு** : வியாபாரத்தின் இலாபம் முழுவதும் தனியாள் வணிகரையே சேரும். அதில் வேறு எவரும் பங்கு கோர முடியாது. இது உரிய ஊக்குவிப்பாக அமைகிறது.

**3. நெகிழ்வுத்தன்மை** : தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்வுத்தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். இவ்வகை தொழில் அமைப்பில் தனி வணிகர் ஒருவரே உரிமையாளர் என்பதால் சந்தை நிலவரத்திற்கேற்பவும், வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்பவும் தன் வியாபாரத் தன்மைகளை மாற்றிக்கொள்ளலாம்.

**4. வியாபார இரகசியங்கள் காத்தல்** : வியாபார வெற்றிக்கு வியாபார இரகசியங்களைக் காத்தல் மிகவும் இன்றியமையாததாகும். இதற்குத் தனியாள் வணிகமுறை பெரிதும் உகந்தது. ஏனெனில், தன் வியாபார முடிவுகளை தனியாள் வணிகர் யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டியதில்லை.

**5. விரைவான முடிவு** : தனியாள் வணிகர் ஒருவர் தான் ஒருவரே உரிமையாளராக இருப்பதால் முடிவு எடுக்கும் முன்பு அவர் வேறு எவரையும் கலந்து ஆலோசிக்கவேண்டிய அவசியமில்லை. எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவு எடுக்கிறார்.

**6. அதிக வெகுமதி** : தனியாள் வணிகர் தன் வியாபாரத்தைச் சரிவர கவனிக்கத் தவறினால் நட்டம் ஏற்பட்டுவிடும். இந்நட்டவச்சம் தனியாள் வணிகரின் கடின உழைப்பிற்கு தூண்டுகோலாக அமைகிறது.

**7. எளிமையான கலைப்பு** : தனியாள் வணிகத்தைக் கலைப்பது மிகவும் எளிது. தனியாள் வணிகர் தான் விரும்பியபோது அவருடைய வணிக அமைப்பினை எவ்வித சட்டமுறை சிக்கலும் இல்லாமல் கலைக்கலாம்.

**குறைபாடுகள்**

**1. அளவான முதல்**

தனியாள் வணிக அமைப்பில் உரிமையாளரின் மூலதன ஆதாரங்கள் வரையறுக்கப்பட்டது. இவர் தன்னுடைய சொந்த மூலதனத்தை மட்டுமே நம்பி இருக்கிறார். நிதி தடை தனி வணிகத்திற்கு பெரும் குறையாக உள்ளது. எனவே, தனி வணிகம் சிறிய அளவிலேயே எப்போதும் நடைபெறுகிறது.

**2. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்**

ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் மேலாண்மைத் திறமைக்கும் எல்லை உண்டு. வியாபார நடவடிக்கைகள் அனைத்திலும் தனி வணிகர் வல்லுநராகத் திகழ இயலாது. வியாபார வளர்ச்சிக்குக் குறைந்த மேலாண்மைத்திறன் இடையூறாக அமைகிறது.

**3. வரையறாப் பொறுப்பு**

தனி வணிகரின் வரையறாப் பொறுப்பு அவருடைய ஆர்வத்தைப் பாதிப்பதாகவும், வியாபாரத்தில் நவீன எண்ணங்களைப் புகுத்த தடையாகவும் உள்ளது.

**4. குறுகிய வாழ்வு**

தனியாள் வணிக உரிமையாளரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும். நீண்டகால நோய், இறப்பு ஆகியவை வியாபாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும்.

**5. அவசர முடிவு**

தனியாள் வணிகத்தில் அவசரத்தில் தவறான முடிவு எடுப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். ஏனெனில் பலருடன் கலந்து ஆலோசனை செய்யாமல் தனியாள் ஒருவரே முடிவு எடுக்கிறார்.

## *பாடம்--03 கூட்டாண்மைத் தொழில்*

### *1. கூட்டாண்மைக்கும் - தனியாள் வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.*

| வ. எண் | தன்மைகள் | கூட்டாண்மை | தனியாள் வணிகம் |
|---|---|---|---|
| *1.* | சட்டம் | இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்1932 நெறிப்படுத்துகிறது. | தனிச் சட்டம் ஏதுமில்லை. |
| *2.* | உடன்பாடு | இது உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. | உடன்பாடு அவசியம் இல்லை. |

JAIRAM COLLEGE

| | | | |
|---|---|---|---|
| *3.* | பதிவு | பதிவு கட்டாயமில்லை | பதிவு தேவையில்லை. |
| *4.* | பொறுப்பு | கூட்டுத் தனித்தனி பொறுப்பு | தனிநபர் பொறுப்பு |
| *5.* | உரிமையும் கட்டுப்பாடும் | கூட்டாளிகளிடம் உரிமையும், கட்டுப்பாடும் உள்ளது. | தனியாள் வசம் உள்ளது. |
| *6.* | முதல் | இதில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் முதலிடுகிறார்கள். | ஒரு நபர் மட்டும் முதலிடுவார் |
| *7.* | வாழ்வு | நிலைத்த தன்மை குறைவு | நிலையற்றது. |
| *8.* | இலாபப் பகிர்வு | ஒப்புக்கொண்ட விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்துகொள்வார்கள் | இலாப நட்டத்தை ஒருவரே ஏற்கவேண்டும். |
| *9.* | வேலைப் பகுப்பு | கூட்டாளிகள் வேலையைப் பகிர்ந்து கொள்வார்கள். | தனி நபர் என்பதால் வேலைப் பகிர்வு இல்லை |
| *10.* | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்த அளவு இரண்டு பேர்.அதிக அளவு வங்கி தொழில் எனில் 10 - பேர், இதரத் தொழில் எனில் 20- பேர். | ஒருவர் மட்டுமே. |

### *2.கூட்டாண்மைத் தொழிலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை விவரி.*

**நன்மைகள்**

**1. அமைத்தல் எளிது** : கூட்டாண்மையை அமைப்பது எளிது. கூட்டாண்மையைத் தொடங்க கூட்டாளிகளிடைய ஒரு உடன்பாடே போதுமானது.

**2. பதிவு கட்டாயமில்லை** : கூட்டாண்மையைப் பதிவு செய்யவேண்டிய கட்டாயமில்லை. கூட்டாளிகளின் விருப்பத்திற்குட்பட்டது.

**3. அதிக நிதி ஆதாரங்கள் :** ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் முதல் வழங்குவதால் தனி நபர் வணிகத்தை விட அதிக முதல் திரட்ட வாய்ப்புள்ளது. மேலும் கடன் பெறும் திறனும் அதிகமாவதால் அதிகமுதல் திரட்டலாம்.

**4. கூடுதல் மேலாண்மைத் திறன் :** கூட்டாளிகளின் திறமைக்கேற்ப பணிகள் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கூட்டாளிகளின் திறமை மற்றும் அனுபவம் வியாபார வளர்ச்சியை அதிகரிக்கிறது.

**5. அதிக நிதி தர மதிப்பீடு** : தனியாள் வணிகத்தைவிட கூட்டாண்மையில் கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பினால் அதிக கடன்பெற வாய்ப்புள்ளது.

**6. விரைவான சிறந்த தொழில் முடிவுகள்** : கூட்டாண்மையில் பல கூட்டாளிகள் இருப்பதால் தொழில் பிரச்சனைகளைக் கலந்து ஆலோசித்து நல்ல முடிவுகளை எடுக்கமுடியும்.

**7. இடர்பாட்டில் பங்கேற்பு** : தனியாள் வணிகத்தில் ஏற்படும் இடர்பாட்டை அவர் ஒருவரே ஏற்கவேண்டியுள்ளது. ஆனால், கூட்டாண்மையில் எல்லா கூட்டாளிகளும் தொழிலின் இடர்பாட்டைப் பகிர்ந்துகொள்கின்றனர்.

**8. முயற்சி- பலன் நேரடி தொடர்பு** : கூட்டாண்மையில் கூட்டாளிகள் எவ்வளவுக் கெவ்வளவு உழைப்பைத் தருகின்றனரோ அந்தஅளவில் இலாபம் அதிகரிக்கும்.

**குறைபாடுகள்**

**1. வரையறாப் பொறுப்பு** : கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. மேலும் அது கூட்டுப் பொறுப்பாகவும், தனித்தனிப் பொறுப்பாகவும் திகழ்கிறது. இவ்வரையறாப் பொறுப்பு பலரைக் கூட்டாண்மையில் சேரத் தடுக்கிறது.

**2. குறைவான நிதி வளங்கள்** : கூட்டாண்மையில் அதிக நிதி திரட்டும் வாய்ப்பு குறைவு. கூட்டாளிகளின் கடன் வாங்கும் திறனும் குறைவு. அதிக அளவில் முதல் தேவைப்படும் தொழிலுக்கு கூட்டாண்மைத் தொழில் அமைப்பு பொருந்தாது.

**3. அவநம்பிக்கை** : கூட்டாளிகளிடையே ஏற்படும் நம்பிக்கையின்மை கூட்டாண்மை கலைப்பிற்கு ஒரு முக்கிய காரணம். கூட்டாளிகள் ஒற்றுமையாக இருப்பது கடினம்.

**4. உரிமை மாற்ற தடை** : பிற கூட்டாளிகள் அனைவரின் வெளிப்படையான ஒப்புதல் பெறாமல் எக்கூட்டாளியும் தனக்குள்ள உரிமையைப் பிறருக்கு மாற்றி தர இயலாது.

**5. நீடித்த வாழ்வின்மை** : கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் மரணம், விலகல் நொடிப்பு போன்றவை கூட்டாண்மை அமைப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்.

### *3. கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி*

**1. கூட்டாளிகளின் உடன்பாட்டால்- பிரிவு (40)**

ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. மற்றும் கலைக்கப்படுகிறது. அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

JAIRAM COLLEGE

**2. கட்டாய கலைப்பு - பிரிவு(41)**

அனைத்துக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையிலோ, அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லாக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையிலோ, செய்துவரும் தொழில் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் நிறுவனம் கட்டாயம் கலைக்கப்படும்.

எடுத்துக்காட்டு- மதுவிலக்கு சட்டம், மற்றொரு நாட்டுடன் போர்.

**3. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு - பிரிவு(42)**

ஒரு கூட்டாளி இறந்துவிடின், குறிப்பிட்ட கால கூட்டாண்மையின் காலம் முடிவடைந்தவுடன், குறிப்பிட்ட தொழில் கூட்டாண்மையின் தொழில் நிறைவு, பெற்றவுடன், ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்துவிட்டதாக நீதிமன்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின்.

**4. விருப்பமுறி கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு - பிரிவு (43)**

விருப்பமுறி கூட்டாண்மையில் கூட்டாளி யாரேனும் நிறுவனத்தைக் கலைக்கும்படி பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் நிறுவனம் கலைக்கப்படவேண்டும்.

**5. நீதிமன்றத்தில் கலைப்பு - பிரிவு(44)**

**அ. கூட்டாளியின் மனச் சமநிலை இழப்பு**

கூட்டாளிகளுக்குள் எவரேனும் ஒருவர் பித்து நிலையடைந்தால் நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**ஆ. நிலையான திறமையின்மை**

கூட்டாளி ஒருவர் திறமையாக தொழில் செய்யும் நிலையை இழந்திருந்தால் நீதிமன்றம் கலைப்பிற்காக ஆணையைப் பிறப்பிக்கும்.

**இ. உடன்பாட்டைத் தொடர்ந்து மீறுகை**

கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால், அவருடன் கூட்டாண்மைத் தொழில் செய்வது இயலாது என ஏனைய கூட்டாளிகள் கருதினால் அவர்களுள் எவரேனும் ஒருவர் கூட்டாண்மையைக் கலைக்கக் கோரி நிதிமன்றத்தை அனுகலாம்.

**ஈ. கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு**

கூட்டாளிகளுள் ஒருவர் ஒழுக்கக்கேடான குற்றத்தைச் செய்திருப்பின் ஏனைய கூட்டாளிகளுள் ஒருவர் கலைப்புக் கோரி வழக்குத் தொடுக்கலாம்.

**உ. உரிமை மாற்றம்**

கூட்டாளி ஒருவர் தொழிலில் தனக்குரிய உரிமை முழுவதையும் மூன்றாமவர் ஒருவருக்கு மாற்றிக்கொடுத்துவிட்டால் ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதிமன்றத்தை அனுகலாம்.

**ஊ. நீதி, நேர்மை அடிப்படையில்**

நிறுவனத்தை கலைத்திட போதிய அடிப்படை காரணமுள்ளது என்று நீதிமன்றம் கருதினால், கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

## *பாடம்-04 நிறுமங்கள் -1*

### *1. நிறும அமைப்பு முறையின் நிறைகளையும், குறைபாடுகளையும் விவரி.*

நிறுமம் என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நபர். பொது முத்திரையோடும், நிலைபேற்றுத் தொடர்ச்சியோடும் இயங்குவது.

**நிறைகள்**

**1. நிலைத்தன்மை :** கூட்டுப்பங்கு நிறுமத்தின் வாழ்வு காலம் பங்குநரின் இறப்பு, நொடிப்பு, சம மனநிலை இழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படாது. நிறுமத்தின் சட்ட உரு தன்மையால் இயக்குநரவை மாற்றமோ, உறுப்பினர் மாற்றமோ நிறுமத்தின் நீடித்த வாழ்வைத் தடைபடுத்துவதில்லை.

**2. வரையறு பொறுப்பு :** கூட்டுப்பங்கு நிறுமத்தில் பங்குநரின் பொறுப்பு அவர் எடுத்துக்கொண்ட பங்குகளின் முகமதிப்பிற்கு வரையறுக்கப்படுவதால் நிறுமக் கடன்களுக்குப் பங்குநர்கள் சொந்த சொத்துக்களை இழக்க நேரிடுவதில்லை.

**3. பங்கு மாற்றம் :** நிறுமச் சட்டம் 1956 -ன் படி ஒருவர் தான் வைத்துள்ள பங்குகளை மற்றொருவருக்கு எளிதாகவோ, விரைவாகவோ மாற்றித்தர இயலும். இது நிறுமத்தின் பங்குகளை வாங்க மக்களைத் தூண்டுகிறது.

**4. நிதி திரட்டுவது எளிது :** பங்கு மூலதன சந்தையில் புகழ்ப்பெற்ற நிறுமங்கள் நிதி திரட்டுவது எளிதாகிறது. நிறுமச் சட்டம் 1956, நிறுமங்களின் நலனைக் காக்கும் நோக்குடன் விதிக்கின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் முதலீடு செய்வோருக்கும், தொழில் தொடங்குவோருக்கும் நிறுமங்களை அமைப்பதற்கான ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்கின்றன.

**5. பேரளவு உற்பத்தியின் பெரு நன்மைகள் :** நிறும அமைப்புகள் மிகப்பெரிய தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றதாக இருப்பதால், பேரளவு உற்பத்தியில் கிட்டும் அனைத்து நன்மைகளும் நிறுமத் தொழில் அமைப்புகளுக்குக் கிடைகின்றன.

**குறைபாடுகள்**

**1. சிக்கல் மிகுந்த சட்ட சடங்குகள் :** நிறுமம் ஒன்றை அமைக்கும்போது கடைபிடிக்கவேண்டிய சட்ட சடங்குகள், சங்கடங்களை விளைவிக்கின்றன. நிறும உருவாக்கத்திற்குப் பிறகு பொது நிறுமம் தொழில் தொடங்க சான்றிதழ்பெற மீண்டும் கடைபிடிக்க வேண்டிய விதிமுறை அதிகமாகும். குற்றத்திற்குத் தண்டணையும், அபராதமும் உண்டு.

JAIRAM COLLEGE

**2. நிறுமத்தைத் தொடங்க ஆகும் செலவு :** நிறுமத்தை உருவாக்கும்போது சிறப்பு தேர்ச்சிபெற்ற வல்லுநர்களின் துணையை நாடவேண்டியுள்ளது. பல்வேறு பத்திரங்களைத் தயாரித்து அச்சிட வேண்டியுள்ளது. முதல் திரட்ட விளம்பரம் செய்ய ஆகும் செலவு மிக அதிகம்.

**3. உரிமையும் கட்டுப்பாடும் வேறுபடுத்தப்படல் :** நிறுமத்தின் பங்குநர்கள்தான் அதன் உரிமையாளர்கள். அவருக்கு நிறுமத்தில் நேரடி நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமையில்லை. அதனால் மோசடி செய்து இலாபம் ஈட்ட இயக்குநர் அவையினர் குறியாக இருப்பர். பங்குநர்களின் நிலை பாதிப்புக்குள்ளாகும்.

**4. ஒரு சிலர் கையில் நிர்வாகம் :** இயக்குநர்கள் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிறுமத்தை மேலாண்மை செய்யும் அதிகாரம் இயக்குநர் அவையில் ஒப்படைக்கப்படுகின்றது. மேலாண்மை ஒரு சிலர் கையில் சிக்கி மீளமுடியாத நிலையில் மீண்டும், மீண்டும் அத்தகைய இயக்குநர்களிடம் தொடர்ந்து செயல்படுவதை உணரலாம். பங்குநர்கள் நாடுமுழுவதும் சிதறிக்கிடப்பதால், அவர்களால் நிர்வாகத்தில் பங்கேற்கவும் முடியவில்லை. அக்கறையும் காட்டமுடியவில்லை. மேலும், பங்குநர்களால் ஆண்டுப் பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள முடியவில்லை. இதை இயக்குநர்கள் புரிந்துகொண்டு அவர்களின் தனிப்பட்ட நலத்தைத் தங்குதடையின்றி மேம்படுத்திக்கொள்கின்றனர்.

***02. கூட்டுப் பங்கு நிறுமத்திற்கும் கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி***

| வ. எண் | பொருள் | கூட்டாண்மை நிறுவனம் | கூட்டுப்பங்கு நிறுவனம் |
|---|---|---|---|
| ***1.*** | சட்டம் | 1932 ஆம் ஆண்டைய கூட்டாண்மைச் சட்டம் கூட்டாண்மை நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகின்றது. | 1956 ஆம் ஆண்டைய நிறுவனங்கள் சட்டம் நிறுமங்களைக் கட்டுப்படுத்துகின்றது. |
| ***2.*** | உறுப்பினராகுதல் | தனிநபர் மட்டுமே உறுப்பினராகமுடியும். | ஒரு நிறுவனமே கூட பங்குகளை வாங்கி உறுப்பினராக முடியும் |
| ***3.*** | பதிவு செய்தல் | பதிவு செய்தல் கட்டாயமன்று. கூட்டாளிகள் விரும்பினால் பதிவுசெய்துகொள்ளலாம். | நிறுமங்களைப்பதிவு செய்தல் கட்டாயமயமாக்கப்பட்டுள்ளது. |
| ***4.*** | சட்டத்தகவுடைமை | சட்டப்படி தனியாள் தன்மை இல்லை. கூட்டாண்மையைக் கூட்டாளிகளிடமிருந்துப் பிரித்துப்பார்க்க முடியாது. | நிறுமம் சட்டம் உருவாக்கிய ஒரு செயற்கை நபர். அதன் உறுப்பினர்களிடமிருந்து தனித்து இயங்குகிறது. |
| ***5.*** | பங்கு மாற்றம் | தனக்குள்ள உரிமையைப் பிற கூட்டாளிகளின் இசைவின்றி வேறு எவருக்கும் மாற்றித்தர இயலாது. | பொது வரையறு நிறுமங்களில் பங்குகள் தடையின்றி மாற்றக்கூடியவை. தனிவரையறு நிறுமங்களில் பங்குமாற்றத்திற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. |
| ***6.*** | பொறுப்பு | கூட்டாளியின் பொறுப்பு வரையறாப் பொறுப்புடையது. கூட்டாளி தனித்தனியாகவும், கூட்டாகவும் நிறுவனத்தின் கடன்களுக்குப் பொறுப்பாவார். | பங்குநரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. பங்குகள் மீது செலுத்தப்பெறாதிருக்கும் தொகை அளவே அவர்களுடைய பொறுப்பு உள்ளது. |
| ***7.*** | தணிக்கை | கட்டாயமில்லை. | ஆண்டுதோறும் நிறுவனக் கணக்குகள் பதிவு பெற்ற கணக்காளர் மூலம் தனிக்கை செய்யப்படவேண்டும். |
| ***8.*** | நிதி ஆதாரங்கள் | கூட்டாளிகள் இடும் முதல் தொகையும் திரட்டும் கடன் அளவும் மிகப்பெரும் அளவில் இருக்காது. | மிகப்பெரும் முதலைத் திரட்டவும், மிக அதிகமான கடன் பெறும் திறனும் நிறுமத்திற்கு உண்டு. |
| ***9.*** | நீடித்த வாழ்வு | இறப்பு, மனச்சம நிலை இழப்பு, நொடிப்பு நிலை அடைதல் போன்ற நிகழ்வுகள் கூட்டாண்மையைக் கலைக்கவல்லது. | எந்நிகழ்வுகளும் நிறுமத்தைக் கலைக்காது. நிறுமம் வேறு. அதன் உறுப்பினர்கள் வேறு. |
| ***10*** | கலைப்பு | கூட்டாண்மை நிறுவனத்தை எப்பொழுது வேண்டுமானாலும் சுமுகமாக கலைக்கலாம். | சட்டத்தின் உதவியுடன் குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் நிறுமத்தைக் கலைக்கமுடியும். |

JAIRAM COLLEGE

***03. தனி வரையறு நிறுமத்திற்கும் பொது வரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.***

| வ.எண். | வேறுபாட்டுக் காரணிகள் | தனி வரையறு நிறுமம் | பொது வரையறு நிறுமம் |
|---|---|---|---|
| ***1.*** | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்த அளவு 2 நபர், உச்ச அளவு 50 க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | குறைந்த அளவு 7 நபர், உச்ச அளவிற்குவரம்பு இல்லை. |
| ***2.*** | பங்கு விற்பனை | பொதுமக்களுக்கு பங்கு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது. | பொது மக்களுக்குப் பங்கு விற்பனை செய்யப்படலாம். |
| ***3.*** | தொழில் துவக்கம் | தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன் தொழில் தொடங்கிவிடலாம். | கூட்டுருவாக்கம் மற்றும் தொழில் தொடங்கச் சான்றிதழ் பெற்றவுடன் தொழில் தொடங்கலாம். |
| ***4.*** | தகவலறிக்கை | தகவலறிக்கை வெளியிட இயலாது. | தகவலறிக்கை வெளியிட இயலும். |
| ***5.*** | பங்காணை | பங்காணைகளை வெளியிட இயலாது. | பங்காணைகளை வெளியிட இயலும். |
| ***6.*** | இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதிற்குமேல் இயக்குநராகப் பணியாற்றலாம். | 65 வயதில் இயக்குநர் ஓய்வு பெறவேண்டும். |
| ***7.*** | குறுமப் பங்கொப்பம் | குறுமப் பங்கொப்பத்திற்கு அவசியமில்லை. | தகவலறிக்கையால் குறிப்பிடப்பட்டுள்ள 90 % பங்குமுதல் குறுமப் பங்கொப்பமாகப் பெறுவது சட்டப்படி கட்டாயமாகும். |
| ***8.*** | சட்டமுறைக் கூட்டம் | சட்டமுறைக் கூட்டம் கூட்டவேண்டிய அவசியமில்லை. | வியாபாரம் தொடங்கிய ஆறுமாத காலத்திற்குள் சட்டமுறைக் கூட்டம் நடைபெற வெண்டும். |
| ***9.*** | தகுதிப் பங்குகள் | இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெற வேண்டிய அவசியமில்லை. | இயக்குநர்கள் குறிப்பிட்ட தகுதிப்பங்குகளைப் பெற்றிட வேண்டும். |
| ***10.*** | குறைவெண் | சட்டத்திற்கு வருகைதர வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர்கள் எண்ணிக்கை இருவர். | பொது வரையறு நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்கள் எண்ணிக்கை ஐந்து. |

## ***பாடம் -05 நிறுமங்கள் - II***

### ***01. ஒரு நிறுமச் செயலரின் பணிகளும் கடமைகளும் யாது.***

**நிறுமச் செயலரின் பணிகள் பின்வறுமாறு**

01. நிறுமத்தின் முதன்மை அதிகாரி என்ற முறையில், உண்மைச் சான்றென உறுதியளிக்கவேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடைய பணியாகும்.
02. நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தன்கீழுள்ள அத்துறையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து, தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டியது அவருடைய பணியாகும்.
03. இயக்குநரவைத் தலைவரிடம் கலந்து ஆலோசித்து இயக்குநரவை கூட்ட நாள், இடம், நேரம் முதலியவற்றை முடிவு செய்தலும், அதன் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதும் அவருடைய பணியாகும்.
04. நிறுமச்சட்டத்தின் செயல்பாடுகள், விதிகளுக்கு முரண்படாமலும், அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துக்கொள்ளவேண்டியது அவருடைய பணியாகும்.
05. பங்குநர் கூட்டங்களில் கடைபிடிக்கவேண்டிய சடங்குகள் அனைத்தையும் பின்பற்றியும், கூட்டங்களில் எடுத்த முடிவுகளை நிகழ்ச்சிக்குறிப்பேட்டில் தவறின்றிப் பதிவுசெய்து வைத்தலும் செயலருடைய பணியாகும்.
06. பங்குநர்களின் சந்தேகங்களுக்கு, சரியான பதிலை, சரியான நேரத்தில் தரவேண்டியது அவருடைய பணியாகும்.
07. பங்கு ஒதுக்கீட்டு மடல், பங்குச் சான்றிதழ் வழங்கல், பங்காதாய ஆணை, பங்குகள் மாற்றுகை, பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல் போன்ற நடவடிக்கைகளிலும் அவருடைய பணி சிறப்பானதாகும்.

JAIRAM COLLEGE

8. முதன்மை அலுவலர் என்ற முறையில் இயக்குநர் அவையுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி, பல்வேறு துறைகளை ஒன்றிணைத்துச் செயல்படுத்துதல் முக்கிய பணியாகும்.
09. தங்கள் ஊழியர்களிடம் நம்பிக்கை ஊட்டி அவர்களின் உளமார்ந்த ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

**நிறுமச் செயலரின் கடமைகள்**

1. **சட்டமுறைக் கடமைகள்**
2. **பொதுக்கடமைகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிப்பர்.**

### *01. நிறுமச் செயலரின் சட்டமுறைக் கடமைகள்*

1. உண்மையெனச் சான்றளிக்கவேண்டிய அனைத்து ஆவனங்களிலும் சரிபார்த்து கையொப்பமிடுதல் அவருடைய முக்கிய கடமையாகும்.
2. தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையைத் தாக்கல்செய்ய ஏற்பாடு செய்தலும் அவருடைய கடமையாகும்.
3. ஒதுக்கீடு செய்த 3 -மாதங்களுக்குள் பங்குச் சான்றிதழை வழங்க ஏற்பாடு செய்வதும், பங்கு மாற்றகத்தில் இரு மாதங்களுக்குள் மாற்றுகை செய்திட ஏற்பாடு செய்வதும் அவருடைய கடமையாகும்.
4. நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம் குறித்த அறிவிக்கையைத் தாக்கல் செய்வது அவருடைய கடமையாகும்.
5. நிறுமத்தின் ஆண்டு அறிக்கையில் கையொப்பமிடல் அவருடைய கடமையாகும்.
6. நிறுமத்தின் ஒவ்வொறு உறுப்பினர்க்கும் பொதுக்கூட்ட அறிவிக்கையை அனுப்புதலும் அவருடைய கடமையாகும்.
07. உறுப்பினர் பதிவேடு, கடனீட்டுப் பத்திரதாரர் ஏடு போன்ற சட்டமுறை ஏடுகளை உரிய முறையில் வைத்திருத்தலும் அவருடைய கடமையாகும்.
08. இயக்குநரவை கூட்டக் குறிப்புகள், ஆண்டுப்பொதுக் கூட்டக் குறிப்புகளை, கூட்டம் நடைபெற்ற 30- நாட்களுக்குள் தயார் செய்வதும் அவருடைய கடமையாகும்.

### *02. பொதுக்கடமைகள்*

1. தன்னுடைய கடமைகளை மிகுந்த கவனத்துடனும், நேர்மையுடனும் செய்தலும், தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.
2. இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தலும் அவருடைய பொதுக்கடமையாகும்.

## *பாடம்-06 பங்கு மாற்றகம்*

### *01. பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?*

### *நிறுமத்தின் நன்மைகள்*

1. பங்குமாற்றகத்தில் கையாளப்படும் பங்குகளைக் கொண்டுள்ள நிறுமத்தின் மதிப்பு மூலதன சந்தையில் உயரும்.
2. ஒரு நிறுமத்தின் பத்திரங்களுக்கான சந்தையை விரிவடையச் செய்கிறது.
3. பங்குகள் விற்க மற்றும் வாங்கப்படுவதால் நிறுமத்தின் பங்குகளின் மதிப்பு கூடுவதால், இந்த நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்போது சாதகமான பேரத்தைப்பெற உதவிசெய்கிறது.
4. புதிய நிறுமங்கள் மூலதன சந்தையில் எளிதாக தனக்குத் தேவையான முதலீட்டினைப் பெற உதவுகிறது.
5. ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன.

### *முதலீட்டாளர்களுக்கு நன்மைகள்*

1. முதலீட்டாளர்களின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் காக்கின்றன.
2. பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும், முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மைகளையும் அளிக்கின்றது.
3. பங்கு மாற்றகத்தில் வணிகம் செய்யப்படுகின்ற பத்திரங்கள் கடன்களுக்கு நல்ல பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
4. நிறுமங்களின் பத்திர மதிப்புகளை விலைப்புள்ளிகளாக பங்கு மாற்றகங்கள் வெளியிடுவதால் முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டின் உண்மை மதிப்பை அறிய முடிகின்றது.
5. நல்ல நிதி நிலைமையுடைய நிறுமங்களின் பங்குகள்தான் பெரும்பாலும் பங்குமாற்றகத்தில் வணிகம் செய்யப்படுகின்றன. அதனால் முதலீட்டாளர்கள் நிதிநிலைமை சீரழிந்த நிறுமங்களில் முதலீடு செய்வதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

### *சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்*

1. முதலீட்டாளர்களின் சேமிப்பை நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்விப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு துணை புரிகின்றன.
2. பத்திரங்களின் விற்பனையை விரிவடையச் செய்து சிறப்பாக மேலாண்மை செய்யப்படும் நிறுமங்களின் நிலையை உயர்த்துகின்றன.
3. நன்கு நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் சுலபமாக நிதி வளங்களைப் பெறுவதற்குப் பங்கு மாற்றங்கள் உதவுகின்றன.
4. அரசுக்குத் தேவையான நிதியை மக்களிடம் கடனாகப் பெறுவதற்கும், நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சித் திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன.
5. கிடைத்தற்கரிய நிதி வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த பங்குமாற்றங்கள் உதவுகின்றன.

JAFFNA COLLEGE

### பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள்

1. அமைப்பு முறைகளில் சீரான தன்மையும் கட்டுப்பாடும் இல்லை.
2. இதில் உறுப்பினர் ஆவதற்கு ஏதும் கட்டுப்பாடுகள் இல்லை. குறைந்த பட்ச கல்வித்தகுதியை வரையறுக்கவில்லை.
3. சில நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன.
4. பங்குகள் பட்டியலிடப்படுவதற்கு சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.
5. விலைபொருள் மாற்றகங்களில் இருப்பது போன்று பக்க விலக்கு அளி அல்லது மிகை அளவு ஏதுமில்லை.

## 02. செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்கு.

1988 ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்திய பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியம் ஒரு நிர்வாக அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது.

### நோக்கம்

1. முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்.
2. பத்திர சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல். அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், அதனைச் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடல்.
3. உறுப்பினர்1. சபைத் தலைவர், 2. நீதி மற்றும் சட்ட அமைச்சக அலுவலரிடமிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், 3. ரிசர்வ் வங்கி அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஒறுப்பினர், 4. மேலும் இரண்டு உறுப்பினர்கள், சபைத்தலைவர் மற்றும் வாரியத்தின் ஐந்து உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.
4. செபியின் பொது கண்காணிப்பு, வழிகாட்டுதல்(ஆணை) மேலாண்மை ஆகியவை உறுப்பினரவையிடம் இருக்கும். இந்த அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிறைவேற்றும்.
5. வாரியத்தின் சபைத் தலைவரையும், மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பிலிருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.
6. மத்திய அரசு நிதியுதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகின்றது.

### இயல்புகள்

1. இது சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரைக் கொண்ட ஒரு கூட்டுருவாக்கமாகும்.
2. இதன் தலைமை அலுவலகம் மும்பையிலும், கிளை அலுவலகங்கள் இந்தியாவின் மற்ற நகரங்களிலும் உள்ளது.

### பணிகள்

1. பங்கு மாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்.
2. மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணிகளைச் செய்தல்.
3. பங்கு தரகர்கள், துணைத் தரகர்கள், வெளியீட்டு வங்கியர், ஒப்புறுதியாளர்கள் செயல்பாடுகளைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
4. பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களைப் பதிவு செய்து ஒழுங்குபடுத்துதல்.
5. சுய கட்டுப்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்தலும், ஒழுங்குபடுத்தலும்.
6. பத்திர சந்தையில் மோசமான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளைத் தடை செய்தல்.
7. பத்திரங்களுக்கான உள் வணிகத்தைத் தடை செய்தல்.
8. முதலீட்டாளர்களுக்கிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தல் மற்றும் இடைத்தரகர்களுக்கான பயிற்சி அளித்தல்.

### செபியின் அதிகாரங்கள்

### 1. செபி சட்டம் வழங்கியவை

1. பங்கு மாற்றகத்திடமிருந்து பருவகால அறிக்கைகளைக் கோருதல்.
2. சில ஆவணங்களைப் பராமரிப்பது குறித்து பங்கு மாற்றகங்களுக்கு வழிமுறைகளை வழங்குதல்.
3. பங்கு மாற்றகங்களின் அலுவல்கள் குறித்து பங்கு மாற்றகங்களையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ அழைத்து விவரம் கோறுதல்.
4. பங்குகளைப் பட்டியலிடக்கோரி பொது நிறுவனங்களைக் கட்டாயப்படுத்துதல்.

### 2. பத்திர ஒழுங்காற்றுச் சட்டம் அளித்த அதிகாரங்கள்

1. பங்கு மாற்றகத்திற்கு அதிகாரம் அளிக்கும் உரிமை.
2. அமைப்பு, உறுப்பினர்கள் அனுமதி போன்றவற்றில் பின்பற்றப்படும் விதிமுறைகளை மாற்றியமைக்க ஆணையிடும் அதிகாரம்.
3. பங்கு மாற்றகங்களின் மேலாண்மைக் குழுவின் செயல்பாட்டை விலக்கிவைக்கும் அதிகாரம்.
4. ஒரு அங்கிகரிக்கப்பட்ட பங்கு மாற்றகத்தின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் உரிமை.
5. குறிப்பிட்ட சில நிலைகளில் ஒப்பந்தங்களைத் தடை செய்வதற்கான உரிமை.

JAIRAM COLLEGE

## பாடம் -07 கூட்டுறவு அமைப்புகள்

### 01. கூட்டுறவு சங்கத்திற்கும், கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

| வ. எண் | தன்மைகள் | கூட்டுப்பங்கு நிறுமம் | கூட்டுறவு சங்கங்கள் |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது இலாப நோக்கோடு பேரளவு தொழில் செய்வதற்காக பன்மர் ஒன்றிணைந்த அங்கமாகும். | இது சேவை நோக்கோடு பொருளாதாரத்தில் நலிவடைந்த நபர்கள் தன்னிச்சையாக சேர்ந்து அமைக்கும் சங்கம். |
| 2 | வாக்குரிமை | ஒரு பங்குக்கு ஒரு வாக்குமுறை கடைபிடிக்கப்படுகின்றது. | ஒரு நபர் ஒரு வாக்குமுறை கடைபிடிக்கப்படுகின்றது. |
| 3 | பங்கு மாற்றுதல் | பொது நிறுவனத்தின் பங்குகளைத் தடையின்றி மாற்றலாம். | உறுப்பினர்கள் பங்குகளைச் சங்கத்திடமே திருப்பித் தந்துவிடலாம். |
| 4 | முக்கியத்துவம் | மனிதர்களை விட பணத்திற்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. | பணத்தை விட மனிதர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. |
| 5 | பங்குகள் மதிப்பு | பங்குகள் மதிப்பு உயர்ந்தே இருக்கும். பங்குகளை முனைமத்திலோ, வட்டத்திலோ வெளியிடலாம். | பங்குகளை முக மதிப்பில் மட்டுமே வெளியிடலாம். |
| 6 | சுரண்டப்படுதல் | முதலாளித்துவ முறைப்படி அமைக்கப்படுவதால் பொதுமக்களைப் பல வகைகளில் சுரண்டும் வாய்ப்பு உள்ளது. | கொள்ளை இலாபம் மீட்டும் வணிகர்களின் சுரண்டல்களிலிருந்து உறுப்பினர்களை இந்த சங்கம் பாதுகாக்கின்றது. |
| 7 | சுயநலப்போக்கு | சுயநலமும், போட்டி மனப்பான்மையும் எப்போதும் நிலவுகிறது. | ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக என்ற போக்கு நிலவுகிறது. |
| 8 | நோக்கம் | இலாபம் ஈட்டுவதே இதன் நோக்கமாகும். | உறுப்பினர்களுக்குச் சேவை புரிவது இதன் முதன்மை நோக்கமாகும். |
| 9 | பதிவு | நிறுமச்சட்டம் 1956 - ன்படி ஒவ்வொரு நிறுமம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்படவேண்டும். | இது மாநில அரசின் கூட்டுறவுச்சங்க சட்டத்தின்படி அமைக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட வேண்டும். |
| 1 | உள்ளூர் உறுப்பினர் | எப்பகுதியில் வாழ்பவரும், உலகில் பல பகுதியில் வாழ்பவர்களும் பங்குதாரர்கள் ஆகலாம். | இச்சங்கத்தில் குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர் மட்டுமே உறுப்பினராகச் சேர்க்கப்படுவர். |

### 02 கூட்டுறவு அமைப்பின் சிறப்பியல்புகளை விவரி.

**1. தன்னிச்சையாக சேரும் சங்கம் :** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும். இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேருமாறு ஒருவரைக் கட்டாயப்படுத்த முடியாது. ஒருவர் எப்போது வேண்டுமானாலும் இச்சங்கத்தில் சேரலாம். அதுபோலவே விரும்பும்போது அவர் அதிலிருந்து விலகலாம்.

**2. சமத்துவம் :** இதில் எல்லா உறுப்பினர்களும் சமம். எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு. ஒருவர் அதிக முதலீடு அளிக்கும் காரணத்தினால் அதிக உரிமை அவருக்குக் கிடையாது.

**3. மக்களாட்சி முறையில் மேலாண்மை :** இதன் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. ஆளுக்கொரு வாக்கு என்ற சமத்துவ அடிப்படையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

**4. வளங்களின் இணைப்பு :** இந்த அமைப்பின் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகின்றது. அவர்கள் எல்லா உறுப்பினர்களின் நலனுக்காகவும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

JAIRAM COLLEGE

**5. ஒருமுனைப்படுத்திய முயற்சி :** இந்த அமைப்பில் எல்லா தனி நபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர். கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக.

**6. சேவையின் தத்துவம் :** கூட்டுறவு அமைப்பின் முதன்மை நோக்கம் சேவை புரிவது, இரண்டாவது நோக்கம் இலாபம் ஈட்டுவது, உறுப்பினர்களுக்குத் தேவையான சேவையை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது.

**7. பன்மர் உறுப்பினராதல் :** பன்மர் இணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவு அமைடப்பு. ஒரு அமைப்பு உருவாக்க குறைந்தபட்சம் 25 -நபர்கள் தேவை. அதிகபட்சம் வரையறை ஏதும் இல்லை.

**8. சட்டத்தகைமை :** இதில் உறுபிப்னர்கள் ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்குரிய சட்ட தகுதி பெற்று இருக்கவேண்டும். கூட்டுறவு சங்கத்தை அமைக்கும் உறுப்பினர்களின் சட்ட தகுதி என்பது அவர்கள் உரிமை வயதை அடைந்தவராக இருக்கவேண்டும்.

**9. உறுப்பினராக தடையில்லா வாய்ப்பு :** பொதுவான பொருளாதார நோக்கமுள்ள ஆண், பெண் எவரும் இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேரலாம். சாதி, சமய பாகுபாடின்றி எவரும் உறுப்பினராகலாம்.
**10. நிதி :** கூட்டுறவு சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த சங்கமும் தனது பங்கு முதலை உறுப்பினர்களிடமிருந்து திரட்டுகின்றது. பங்குகளின் முகமதிப்பு மிக குறைவானதாக இருக்கும்.

### *03. கூட்டுறவு சங்கத்தின் நன்மை மற்றும் தீமைகளை விளக்குக.*

**நன்மைகள்**

**1. அமைப்பது எளிது** : இதனை அமைப்பது எளிது. செலவும் அதிகமில்லை, பதிவு நடைமுறையும் எளிமையானது.
**2. வரையறா உறுப்பினர்கள்** : அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.
**3. மக்களாட்சி மேலாண்மை** : இதன் மேலாண்மை மக்களாட்சி முறையில் அமைந்துள்ளது. ஒருநபர்-ஒருவாக்கு என்ற தத்துவம் கடைபிடிக்கப்படுகின்றது.
**4. வரையறு பொருப்பு** : உறுப்பினர்களின் பொறுப்பு அவர்களை வைத்துள்ள பங்குகளின் பெயரளவு மதிப்பு வரை என வரையறுக்கப்பட்டுள்ளது.

**5. நிலையான தன்மை** : பதிவு செய்யப்படுவதால் கூட்டுறவுச் சங்கங்கள் நிரந்தரமான சட்டத் தோற்றம் பெற்றிருக்கின்றன. இது நீடித்த வாழ்வுடையது.
**6. மேலாண்மை சிக்கனம்** : பொதுவாக கூட்டுறவு அமைப்பில் அதன் உறுப்பினர்களே மேலாண்மை செய்கின்றனர். இயக்குநரவை குழுவிலுள்ள உறுப்பினர்கள் கௌரவ சேவையை அளிக்கின்றனர். எனவே செலவுகள் மிகக் குறைவே.
**7. மலிவான சேவை** : கூட்டுறவு அமைப்பு சிறந்த சேவைகளைக் குறைந்த செலவில் அளிக்கிறது. சேவை என்பதே முதன்மை நோக்கம்.
**8. வரிச்சலுகைகள் :** கூட்டுறவு நிறுவனங்களின் வருவாய்க்கு வருமானவரி விதிக்கப்டுவதில்லை. வருமானவரி, முத்திரை கட்டணம், பதிவுக்கட்டணம், ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

**குறைபாடுகள்**

**1. திறமையற்ற மேலாண்மை** : இதன் உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்ய போதுமான திறமையும், அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.
**2. வரையறு முதல்** : குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் இச்சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஒருநபர் ஒரு வாக்கு என்ற முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதைத் தடை செய்கிறது.
**3. தக்க தூண்டுகோல் இல்லாமை :** இலாபநோக்கு இல்லாமையும், குறைந்தபட்ச 9- விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்பு குறைய காரணமாகிறது.
**4. ஒற்றுமையின்மை** : சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் இவ்வமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகின்றது.

## *பாடம்-08 தொழில் துறையில் அரசு*

### *01. அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.*

எங்கள் நலனுக்காகப் பணியாற்றுவது மற்றும் உற்பத்தி, வணிக நடவடிக்கைகள் தங்குதடையின்றி நடைபெறத் தேவையான சூழ்நிலையை உருவாக்கித் தருவதுமே அரசுத் தொழிலமைப்புகளின் முக்கிய நோக்கமாக உள்ளது. அரசுத் தொழிலின் பிற முக்கிய நோக்கங்களாவன,

**1. பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது** : தனியார் தொழில் முனைவோர், இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஒன்றுபடுத்தவேண்டிய அவசியமாகின்றது.

**2. அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படைத் தொழில்கள் எனலாம். எடுத்துக்காட்டு- எஃகு ஆலைகள், வேதியல் தொழில்கள் போன்றவை அடிப்படைத் தொழில்களாகும். இத்தகைய தொழில்கள் அரசுத் தொழிலகளாகவே இருப்பது நல்லது.



JAIRAM COLLEGE

**3. பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்** : சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்யவேண்டும். மேலும் அந்நிறுவனங்களில் தொழில் உற்பத்தி தொடக்ககாலம் நீண்டதாக இருக்கும். தனியாரால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது. எனவே அத்துறையில் அரசே தனக்காகச் சொந்தமான நிறுவனங்களை ஏற்படுத்தும்.

**4. இன்றியமையாத வசதிகளை நல்குவது** : குடிநீர், மின்உற்பத்தி, மின்சக்தி, எரிவாயு, போக்குவரத்து போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும். இத்தேவைகள் மிகக் குறைந்த விலையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே இவ்வசதிகளைச் செய்துதரும் அமைப்புகள் அரசுத் தொழில்களாகவே இயங்க வேண்டும்.

**5. இயற்கை வளங்கள் தோண்டி எடுத்தல்** : நாட்டில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள் வளங்களைத் தோண்டி எடுக்கும் தொழில்களில் முதலீடு செய்து நட்டத்தை ஏற்றுக்கொள்ள தனியார் துறையினர் விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு கமிசன் புது வாய்ப்புகளை கண்டுபிடிப்பதற்கான பேரளவுத் தொகையினைச் செலவிடுகிறது.

**6. நிறைய வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல்** : அதிகமான வேலைவாய்ப்புகள் பொதுவுடைமை உற்பத்தியினாலேயே ஏற்படும். தனியார் துறை வழங்கும் வேலை வாய்ப்புகளைவிட, பொதுத்துறை அமைப்புகள் வழங்கும் வேலை வாய்ப்புகள், ஊழியர்களுக்கான வசதிகள் அதிகம்.

**7. அரசின் வருவாயைப் பெருக்குதல்** : சில அரசு நிறுவனங்கள் வணிகக் கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும். அந்நிறுவனங்களின் வருவாய் அரசுக் கருவூலகத்தில் சேர்க்கப்படும். இவ்வாறு அரசின் நிதி நிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படுகின்றது.

**8. முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்துவது** : ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலிலிருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது. நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழில்கள் தனியார் வசம் இருந்தால், ஒரு நெருக்கடி ஏற்படும்பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்காமல் போகும் நிலை உருவாகும். எனவே பாதுகாப்புத் தொழில்களை எப்போதும் அரசே ஏற்று நடத்திவருகிறது.

## *02. அரசு நிறுமத்தின் இயல்புகள், நிறை, குறைகள் யாவை?*

மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 - விழுக்காட்டைக் கொண்டிருந்தால் அது அரசு நிறுமமாகும். - 1956 ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டம்.

### இயல்புகள்

**1. கூட்டுருவாக்கம்** : அரசு நிறுமம் அந்திய நிறுமச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகின்றது.

**2. அரசு நிதி** : இதன் மொத்த பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 -விழுக்காட்டை அரசு அளிக்கிறது.

**3. பொதுமக்களின் பங்கேற்பு** : தனியாரும் இந்நிறுமத்தில் பங்கு முதலில் பங்கேற்க இயலும்.

**4. மேலாண்மை** : இயக்குநரவை இதனை மேலாண்மை செய்கிறது. தக்க வல்லமையும், அனுபவமும் வாய்ந்தவர்களையே இதன் இயக்குநர்களாக பெரும்பான்மை பங்கு முதல் பெற்றிருக்கும் அரசு நியமிக்கும். பல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் தரும் வண்ணம் இதன் இயக்குநர்களை அரசு நியமிக்கும்.

### நிறைகள்

**1. எளிதான அமைப்பு** : அரசு நிறுமத்தை உருவாக்குவதும் இவற்றின் அமைப்பில் அவ்வப்போது தேவையான மாற்றங்களைச் செய்வதும் எளிது. இவற்றைத் தொடங்க பாராளுமன்றத்தின் முன் அனுமதி தேவையில்லை.

**2. நெகிழ்வுத்தன்மை** : இது நிறுமச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு இருப்பினும் தேவையான அளவு நெகிழ்வுத்திறன் பெற்றுள்ளது. மாறுபடும் பொருளாதார வணிகச் சூழ்நிலைக்கு ஏற்ப இவை தமது அமைப்பு, இயக்கம், நிர்வாக முறைகளை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**3. செயல் சுதந்திரம்.** : இதன் நிதி, நிர்வாகம், பணியாளரை அமர்த்தல் போன்றவற்றைச் செய்ய இதற்கு முழு சுதந்திரம் உண்டு.

**4. அரசு தலையீடின்மை** : இதன் செயல்பாட்டில் அரசு தலையிடுவதில்லை. எனவே தனியார் துறையினரைப் போன்று இது தொழில்முறைக் கண்ணோட்டம், செயல் சுதந்திரம், விரைந்து முடிவெடுப்பது, நெகிழ்வுத்திறன் போன்ற சிறப்புகளைக் கொண்டுள்ளது.

### குறைகள்

**1. அரசு தலையீடு** : அரசு நிறுமம் பெற்றிருப்பதாகச் சொல்லப்படும் செயல் சுதந்திரம் உண்மையிலேயே இவற்றிற்கு இருப்பதில்லை. இதன் இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுவதால் அரசு என்ன எண்ணுகிறதோ அதை செயல்படுத்திக்கொள்ள வாய்ப்புகள் அதிகம்.

**2. சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுதல்** : இந்நிறுமங்களுக்குத் தேவையான முதல் முழுவதையுமோ, அதன் பெரும் பகுதியையோ அரசு தருவதால் அரசு தன் எண்ணங்களை இவற்றின் நிர்வாகத்தின்மீது திணிக்க வாய்ப்புகள் அதிகம்.

**3. ஈடுபாடின்மை** : இதன் உயர் பதவிகளில் அமர்த்தப்படும் அரசு அலுவலர்கள் வேறு பதவிகளுக்கு அடிக்கடி மாற்றப்படலாம். அவர்கள் இதில் பங்குமுதல் இடுவதில்லை. எனவே அவர்கள் திறம்படவும், ஈடுபாட்டுடனும் உழைப்பாளர்கள் என்றும் கூறமுடியாது.

JAYARAM COLLEGE

**4. பதிலளிக்கும் பொறுப்பு :** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இதன் ஆண்டு அறிக்கை அதன் நிதி குறித்த செய்திகளையே தாங்கியிருக்கும். இந்நிறுமத்தின் செயல்பாட்டுத்திறன், மேலாண்மை போன்ற முக்கியமான செய்திகள் குறித்து அந்த அறிக்கை அதிகமாகக் கூறுவதில்லை.

## *03. துறைவாரி அமைப்பின் இயல்புகள், நன்மைகள், தீமைகள் யாவை?*

**இயல்புகள்**

1. துறைவாரி அமைப்புகள் தமக்குத் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு முழுமையாக அரசை சார்ந்திருக்கின்றன.
2. இந்நிறுவனங்கள் அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றன. அந்தந்த துறை அமைச்சர்கள் இவ்வமைப்பில் தலைமை வகிக்கும் பொறுப்பை ஏற்கின்றனர்.
3. இந்நிறுவனங்களின் வரவு செலவு திட்டம் அரசின் கணக்குப்பதிவுத்துறை தணிக்கைக்கு உட்பட்டதாகும்.
4. இத்தொழில் அமைப்புகள் அரசு துறைகளின் பகுதிகளாக இயங்குவதால் அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெற்று விளங்குகின்றன. அரசின் இசைவின்றி இந்நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க இயலாது.

**நிறைகள்**

**1. முழுமையான அரசு கட்டுப்பாடு** : துறைவாரி அமைப்புகள் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குபவை. சம்மந்தப்பட்ட அரசு துறையின் நிர்வாகத்திற்கு உட்பட்டு இருப்பதால் அரசுக்கு இந்நிறுவனங்களின் செயல்பாட்டைச் சரியான வழியில் கட்டுப்படுத்த முடிகிறது.

**2. மேலாண்மை** : அரசு அலுவலர்கள் இந்தத் தொழில்களை மேலாண்மை செய்கின்றனர். இந்நிறுவனங்களை நிர்வகி'கும் அரசு அலுவலர்கள் உண்மையாகவும் திரம்படவும் உழைப்பர்.

**3. அரசுக்கு வருவாய் ஈட்டுவது** : இந்நிறுவனங்கள் வியாபார நோக்கில் செயல்படும் இந்தொழில்கள் மூலம் கிட்டும் வருவாய் அரசைச் சாரும். அவை சமூகப் பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

**4. நிதியினை தகுந்த வழியில் பயன்படுத்துதல்** : துறைவாரி நிறுவனங்கள் கடுமையான கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுவதால் இவற்றிற்கு அளிக்கப்பட்ட நிதியினை முறைகேடாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

**குறைபாடுகள்**

**1. அரசின் தலையீடு** : அரசின் நெகிழ்வற்ற நடைமுறைகளையும், மரபுகளையும் பின்பற்றவேண்டிய அவசியமுள்ளது. தங்களுடைய கொள்கைகளை வகுக்க இந்நிறுவனங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படுவதில்லை. எனவே இவ்வமைப்பில் பின்பற்றப்படும் மையக்கட்டுப்பாடு - முடிவு எடுப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துகிறது.

**2. தகுதிவாய்ந்த அலுவலர் இல்லை** : இந்தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கும் பணியாளர்கள் அரசு அலுவலர்கள். தலைமைப் பொறுப்பில் இருக்கும் அரசு அலுவலர்கள் தொழில்நுட்பம் உடையவர்களாக இருப்பதில்லை.

**3. மையப்படுத்தப்பட்ட அதிகாரம்** : தொழில் முறையான நோக்கங்கள் புறக்கணிக்கப்பட்டு அரசு மட்டத்தில் இந்த அமைப்பின் கொள்கைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆட்சி மாற்றத்தின்போது தம்முடைய கொள்கைகளை மாற்றவேண்டிய நிலை இவ்வமைப்பிற்கு உள்ளது.

**4. தாமதமும் சிகப்பு நாடா போக்கும்** : இத்தொழில் நிறுவனங்கள் நெகிழ்வற்ற நடைமுறைகளையும், மரபுகளையும் பின்பற்றி வருகின்றன. இத்தகைய மரபுகளும், நடைமுறைகளும் இந்நிறுவனங்கள் விரைந்து செயல்படுவதற்குத் தடையாக உள்ளன.

--------------------------

JAIRAM COLLEGE